புதிய பிளேட் சங்கீத ரத்தினங்கள்

S. V. சுப்பையாபாகவதர், ஆரியகான K. S. செல்லப்பாஐயர், அனந்தநாராயண ஐயர், P. S. வேல்நாயர், M. S. தாமோதர ராவ், K. B. சுந்தராம்பாள், S. G. கிட்டப்பா இவர்கள் பாடிவரும்

சிங்கார நவீனகான

# ஸ்ரீ வள்ளி திருமணம்.

2-பாகம் அடங்கியது. ரிஜிஸ்டர் காபிரைட் 1931.



இதன் விலை அணா 6.

...னந்த பாஷ்ய வீ. எஸ். வீரணக்கோனர் என்ற
...தக்கோவலனரவர்கள் இயற்றியது.

12 DEC

O-2.MVK2-V
N30

சங்கீத ரத்தினம், S. V. சுப்பையா பாகவதர்,

ஆரியகான K. S. செல்லப்பா ஐயர்,

அனந்தநாராயண ஐயர், P. S. வேல்நாயர்,

மதுரகான M. S. தாமோதரராவ்,

K. B. சுந்தராம்பாள், P. S. ரத்னுபாய்

சங்கீத பாலகிருஷ்ணகான சபையார் இவர்கள்

ஆடிவருகிற

சிங்கார நவீனகானம்

13 DEC 1931

# ஸ்ரீவள்ளி திருமணம்.

ஜமீன் சிறுவாலை சமஸ்தானம்

அம்பலத்தாடி

வித்வானந்தபாஷிய

## வீ. எஸ். வீரணக்கோனரவர்கள்ால்

மதுரை

மீனலோசனி அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

காபி ரைட்.] 1930. [விலை ணா 5.

59415

## சரஸ்வதி துதி.

மதுரராகவசனியே நீ என்ற மெட்டு.

இராகம் - அடாணா. தாளம் - ரூபகம்.

### பல்லவி.

பதுமவாணீ பதமீவாநீ
பணியுமேழை யெனைக்கண்காணீ (பதும)

### அநுபல்லவி.

சதுர்மகாவ தனர்கல்யாணி
சகலஜீவ ஜனபுராணி
தமிழுக்கருள் விதியே
தாளப்பணி நிதியே
தமன்யக்குண மதியே
தருமெய்ச்சரஸ் வதியே
சாகவிபொழி காளமுகிலும்
தரவவைபடிக் காசர்புகழும்
இரகுவரமெய் நூலைப்புகழும்
இனியசொடுமை தாஸவர்களும்
எல்லா முனதுசெய
லல்லாற் கவியினிலே
வல்லா ரெனப்புவிமேல்
சொல்லா தாமுறுமோ
துதிசெயவிசை பதசரமணீ
சுதிசரிகம பதசாமணி
சொந்தத்தா னம்பெற்றே
வந்தித்தே னன்புற்றே
தோரணிஜெய வீரணதமிழ்
சூழ்ந்துயவே பாந்தமுடன் (பதும)

உ

ஸ்ரீராமஜெயம்.

திருக்கார்த்திகேயனே நம;

# சிங்கார நவீன கான

# ஸ்ரீவள்ளிதிருமணம்.

## சிற்றூர் நம்பிராஜன் கொலு.

### தெய்வவணக்கம்.

திரிலோகமும் புகழும் சுந்தர என்ற வர்ணமெட்டு.

இராகம்-மத்தியமாவதி. தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

திரிலோசனக் கடவுள்குமர
இப தூப ஸ்ரீப ராபரனே (திரி)
திருமான் மருகா சரணம்
பெருமான் முருகா தருணம்
சிரவண சதுர்முக குருபர
சரவண பவகுக அரஹர (திரி)
தென்பு மிகும்புனத் தேசன்
நம்பி யெனும்பெயர் ராசன்
சிற்றூர் தனையர சாளப்
பற்றூர் ஜிதகுண நீளத்
திடந்தந்தென் னிருதயமனத்
திடந்தொந்தம் பெறவருள்கன
சீரண வுங்கழு காசலா
வீரண வின்கவி மாசலா
சேவை தேவை தாவை யாபணிந்தேன். (திரி)

(நம்பிராஜன் சிங்காதனத்தி லமர்ந்தவுடன் அமர் மக்கள் பிதாவை வணங்குகிறார்கள்.) மதுவேணு

அமரநபி என்ற வர்ணமெட்டு.

இராகம்—தேசிகம், தாளம்—ஆதி.

பல்லவி,

வந்தனமே தங்கள் மைந்தர்யாந் தந்தனமே (வந்)

அநுபல்லவி.

மைந்தர்யாந் தந்தனமே சிந்தை யுவந்தனமே (வந்)

சரணம்.

நம்பிராஜன்— சந்தோஷங் கொண்டே னெங்கும்
சாட்சாத்கார மாய்த் தங்கும்
செந்திற் பதிவி ளங்கும்
சேமமே வின்பம் பொங்கும்

பல்லவி.

நந்தனர்காள் சுப நல்லாசீர் தந்தேனிக்கால் (நந்)

தொகையரா.

புதல்வர்—மாண்புறு முயர்வேள்வி மலைச்சாரல் சேர்வாழ்வின்
வனசார்க் கதிப துரையே
மகிழ்வாக விங்குறை சுகுமார ரெங்கட்கு
வழங்குவீ ராசி யுரையே.

பாட்டு.

மனோகர நேருங் காட்சி
வளர்சிற் றார்அர சாட்சி
விநோத சிங்கார மாட்சி
வீரண சீர்நற் சாட்சி (வந்தன)

பல்லவி.

நம்பி— நந்தனர்காள் சுப நல்லாசீர் தந்தேனிக்கால் (நந்)

ம்—கல்யாண் செல்வர்காள்! அருகிலமர்வீராக.

வர்கள் வசனம்—தந்தாய்! அவ்விதமே. (உட்காருகின்றனர்)

நம்—ஹே! எனது அருமைக்குமாரர்காள்! தற்போது என்மனமானது ஓர் முக்கிய விஷயத்தையறிய மிகவும் அவாவுறுகிறது.

புத—செய்தியை யுரைக்கிற் றெரிவிக்கச் சித்தமாக இருக்கின்றோம் பிதா!

நம்—அதாவது,

மாதுபாகமானவா என்ற வர்ணமெட்டு.

இராகம்-நோட். தாளம்-ஆதி.

கண்ணிகள்.

ராஜசெங்கோல் நீதியே நாடுநாட்டின் சேதியே
நாளிற் கேட்கக் கொண்டே னிங்கண் தாழ்வி லாப்பி ரீதியே

புத—நாங்கள் நட்புறுவோம் மெய்ப்படியே பெட்டை யோதியே

நம்— நகர்முழுதும் சுகமுலவ
நலமழைகள் பொழிகிறதா

புத— நாத வேந்த சூரியே மாத மூன்று மாரியே

நம்— ராணுவம்?

புத— ஆணுவம்.

நம்— சோதி வேலன் பாதமே தோத்திரப்ர போதமே
சுத்த பக்தி யோடுசெய்யும் சித்தமெவ் வீதமே

புத— தூயா துத்தியம் நித்தியம் நத்துதல்கி யாதமே

நம்— சனைபரவும் வனசரர்கள்
சொனவறுதி மனவுரமா

புத— சூழும்யோகச் சேமமே வாழ்வினில்நன் னேமமே

நம்— சோபிதம்

புத— சேவிதம்

வசனம்—பிதா மகராஜ்: தங்களின் தெய்வ தனிப்பக்தி மேன்மையால் திங்கண் மும்மாரி செழிப்புறப் பொழிந்து, எங்கணும் பிரஜைகள் இனிமையாய் ஞான்றும், மங்களமோங்க மகிழ்கின்றாரரசே.

நம்—அருந்தவப் புத்ரசிகாமணிகளே! ஆனந்த மெய்தினன், அமர்வீர். ஆனால் இற்றைய நிகழ்ச்சிக்கான விடய மெதுவேனு முளதோ இலதோ?

புத—அண்ணலே! உண்டு. அதை யுரைக்கவே வாயெடுத்தேன் அதற்குள் சமுக திருவாக்கினின்று வினு உதயமாயது. கூறுகிறேன். அதாவது;—நமது தென்புனத்தில் விதைத்துள்ள தினையிற் கதிர்கள் முதிர்ந்துகொண்டு வருகிறபடியால் நமது குலமுறைமைக்கேற்ப, தமது புதல்வியும் எமது சோதரியுமாகிய வள்ளியைத் தினைக்காவலுக்கு அனுப்ப வேண்டியது அவசியம் என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். தந்தாய்!

நம்—மைந்தா! நீ உரைத்தது நியாயந்தான். ஆனல் செல்வமாக வளர்த்துவரும் நமது அருமைக் கண்மணியாகிய வள்ளித்தாயை வனத்திற்கனுப்பவேண்டும் என்ற வாக்கியத்தைக் கேட்ட அக்ஷணமே என்மனமானது திடீரெனத் திகிலடைந்துவிட்டது. "மங்கைப் பருவமுற்ற மாதரார் மணிகளைப் புனக்காவற் கனுப்புவது" என்ற பாரம்பரிய ஜாதியொழுங்கை குலாதிபதியாகிய நாமே மீறுதல் நீதியாகாதென்றும், தகுந்த சகிஜன பரிவார சகாயங்களோடு சென்று காவல்புரிவதில் வள்ளிக்கும் சிரமமில்லை யென்றும், அடிக்கடி நாமும் அவணேகிக்கவணேவும் நம் குலக்கொழுந்தைப் பாதுகாத்து வருவோம் என்றும் உறுதியாக எண்ணியே குழந்தையை யனுப்ப ஒருவாறு தேற்றமடைந்து சம்மதிக்கின்றேன். இன்றே லென்மனம்படியாது.

புத—அதை யோசித்துத்தான் தங்களிடம் சொல்வதற்குச் சிறிது ஏக்கமுற்றோம்.

நம்—சரி. சீக்கிரமாகச்சென்று நமது வள்ளியை அழைத்துவாருங்கள்.

(செல்கின்றனர்)

புத—அவ்விதமே. இதோ.

# கன்னிகாமாடம்.

## வள்ளியம்மை பிரவேசம்.

ஏழைமேல் இன்னும் வர்மமா என்ற வர்ணமெட்டு.
இராகம்-நாட்டைக்குறிஞ்சி. தாளம்-ஆதி.

பல்லவி.

காளைவா கனன் சேயனே
கருதினேன் வருதிநேர் சாமி (காளை)

அநுபல்லவி.

ஆளையா வென்றுன் தாளையா னென்றும்
ஆசை தேக்கிநல் அருள்பெற விருப்பினன் (காளை)

சரணம்.

கா கருணைமுரு கா கவலையற
கா குத்தனின்மரு கா கணத்தே
வே கமுறுசிகி மே லெதிர்வருவாய்
வீ ரணதுதிகொள் கா ரணனேஜெய (காளை)

(தமையர் வருகின்றனர்)

வள்ளி வசனம்—சகோதரர் யாவர்க்கும் தங்கை வள்ளி நமஸ்காரம்.

தமை—மங்களமுண்டாகுக. தங்காய்! நமது தந்தை உன்னை அழைத்துவரும்படி உத்தரவிட்டிருக்கின்றனர் அம்மா.

வள்—மிகவும் சந்தோஷம். அப்படியே இதோ வருகிறேன். அண்ணர்காள் வாருங்கள் செல்வோம். (செல்கின்றனர்)

## சபாமண்டபம்.

[நம்பி ஆசனத்திலிருக்கப் புத்திரர்கள் வந்து வணங்கி]

வசனம்—பிதா! இதோ தங்கை வள்ளியம்மையை அழைத்து வந்தோம்.

[வள்ளிவந்து நம்பியாகிய தந்தையை வணங்குகிறுள்.]

அம்பா ளேன்பால் என்ற வர்ணமெட்டு.

இராகம்—அடாணு. தாளம்-ஆதி.

பல்லவி.

அப்பா நட்பாய் அணிசேர்பா தம்பணிந்தேன் (அப்பா)

அநுபல்லவி.

இப்பா லொப்பாய் எனையே அழைத்த தேனே (அப்பா)

சரணம்.

அங்கே மேன் மாடி மீது
தங்கி நான் வாழும் போது
இங்கே தாங்கள் இப்போதுவர
எதற்கோ அழைத்
ததற்கோ டிவந்தேன் வந்தேன்
மகிழ்வாய் நற் சேதிகோரி (வந்தேன் வந்தேன்)

வசனம்—அப்பா! நமஸ்காரம்.

நம்—கல்யாண்.

வள்—அப்பா! கன்னிகாமாடத்தில் நான் தெய்வப்பிரார்த்தனைசெய்து விட்டுக் கற்புக்குரிய நூல்களை வாசித்துக்கொண் டிருக்குங் கால் அண்ணன்மார்வந்து தாங்கள் என்னை அழைத்ததாகக் கூறக்கேட்டதும் புத்தகங்களையெல்லாம் அப்படியே வைத்து விட்டு ஓடோடியும் வந்தனள். அப்பா! "கற்கக் கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக" என்று தேவரீர் போதித்துளதான வேதவாக்கைப் பசுமரத் தாணிபோல் என் இருதயத்திற்பதித்து அவ்வாறே நடக்கப் பழகி வருகிறேன். பிதாவே! அழைத்த காரணத்தை யறிய விரும்புகிறேன். கருணைபாலிக்க வேண்டும்.

நிம்—கல்வியறிவுமிக்க செல்வமே! உன்னை அழைத்த விஷயத்தைச் சொல்லுகிறேன் கேள், நகருக்கருகாண்மையில் நம்மால் பயிரிடப்பெற்றுப் பலன்கொடுக்குந் தருவாயிலிருக்குந்

இராகம்-செஞ்சுருட்டி. தாளம்-ஆதி.

கண்ணி.

திணைப்புனக் காவல்செய்யச் செல்வமே செல்வதற்கு
நினைப்புற் றழைத்தேனதை நீதடுக்கா தாங்கணுகி
நேயமாய்நம் முன்னோர்க்குள் நிகழ்ந்ததுபோல்
நீள்பாணின் மீதமரு வாயிதுகால் (திணை)

வசனம்—கண்ணே! புனத்து திணைக்கதிர் முதிர்ந்துவிட்டபடியால் பட்சி ஜாலங்கள் படைபடையாக வந்து விழுந்து மணிகளைத் தின்று நாசமாக்குமுன் சென்று இன்று முதல் திணைப் புனங்காவல் செய்யவேண்டும். அதற்கு உன்னை அனுப்ப உத்தேசித்தே அழைத்தேன். இவ்விஷயத்தில் நினது கருத்தை வெளியிடுவாயாக. செல்வமே!

வள்—அப்பா! உத்தரவைச் சிரமேற்கொண்ட விண்ணப்பம் ஒன்று.

அமுதமுதேக்கோரே என்ற வர்ணமெட்டு.

இராகம்—இந்துஸ்தான் பியாகு. தாளம்—ஆதி.

பல்லவி.

புனத்திணைக் காவல்செய்யப் பூவை தெரிவேனோ (புன)

அநுபல்லவி.

பூவை தெரி வேனோ
காவை யறி வேனோ (புன)

சரணம்.

நம்பி— இனத்துணை கூடி இணைசகி சேடி
எல்லாம் வருவாரோடி நில்லாதுபாண் நாடி

பல்லவி.

திணைப்புனக் காவல்செய்யச் சேயே செல்வாயே

அநுபல்லவி.

சேயே செல் வாயே
நேயங் கொள் வாயே (திணைப்)

வள்— யானைமா வேங்கை யாளிநா யாங்கை
யாவோநா டிடப்பய மாவேன்செய் யாதோதீங்கை (புன)

நம்— யானுமுன் னண்ணர் யாவரும் பின்னர்
யாண்டு வருவோம்நன்னர் வேண்டி யழைக்குமுன்னர் (தினை)

வள்—அப்பா! தங்களாக்ளைபோல் தினைக்காவற்குச் செல்லுகிறேன் தாங்கள் இப்போது கூறியபடியே நான் கூப்பிடும்போதெல்லாம், தாங்களாவது சகோதரர்களாவது அடிக்கடி வந்து கொண்டே இருக்கவேண்டும். அப்படி வரத்தவறினல் நான் உடனே ஓடிவந்துவிடுவேனப்பா. பிறகு அதற்காக என்னைக் கோபிக்கப்படாது.

நம்—(சிரித்து) பேஷ் சரியம்மா! அவ்வாறே வருகின்றோம். நீ தோழிமார்களை யழைத்துக்கொண்டு சீக்கிரமாகச் செல். பாணெல்லாஞ் சித்தமாக இருக்கிறது புனத்தில்.

(வள்ளி வணங்கிச் செல்கிறுள்.)

## தினைப்புனம்.

(வள்ளி சகிகளுடன் பிரவேசிக்கிருள்)

மகாவதி குணமாதர் என்ற வர்ணமெட்டு.

இராகம்-தேசிகம், தாளம்-ஆதி.

கண்ணிகள்.

சீலகுஞ்சரி சேடிகாள் வாருங்கள்
திவ்ய தினைப்புனந் தேடியே சேருங்கள்

சகி— சிந்தை மகிழ்ந்தனம் தேவியே அந்தநம்
சீரார் தினைப்புனம் மேவியே வந்தனம்

வள்—நாலு திசைகளிலும் நாடியே பாருங்கள்
நடந்துதொடர்ந்துசென்று ஆலோலங் கூறுங்கள்

சகி— கோல மயிலன்னுய் கூடியிக் காலமே
கோதிலாது பாடுவோங் கோடியா லோலமே

வள்—பாலகிருஷ்ண சௌ பாக்யவி லாசமே
பாஷ்யவி ரணதமிழ்ப் பாடச்சந் தோஷமே

சகி— பாலை நிகர்மொழிப் பாவாயுல் லாசமே
பாங்குற்றோம் வள்ளிமலைச் சோங்கின்ப்ர தேசமே

வள்·வசனம்—சேடிகாள்! தினைப்புனம் இதுதானே? அதோ அங்கு தோற்றுவதுதான் பரண்போலும்?

சகி—ஆம் அம்மணி! இதுதான் நாம் காவல்செய்வதற்காக வந்துள்ள தினைப்புனம், இந்தப் பரணின்மீ திருந்துகொண்டு நாலா பக்கங்களிலும் பார்த்தால் கதிரைத் தின்பதற்குவரும் பறவைகள் நன்கு தெரியும். உடனே அந்தப் பட்சித்திரள் வரும் திசையை நோக்கிக் கவணிலுள்ள கல்லாலெறிந்து அவைகளை நாடாது துரத்தவேண்டும்.

வள்—அறிந்தேன். தோழிகாள்! அவ்விதமே நான் பரண்மீதேறி நாற்புறமும் சுற்றிக் கவனிக்கிறேன். நீங்களும் மிகு ஜாக்கிரதையுடன் சுற்றிப்பாருங்கள். கவனம்.

சகி—அப்படியே செய்கிறோம் அம்மணி.

(வள்ளி பரண்மீதிருந்து ஆலோலம் பாடுகிறாள்)

தேவாசுர குலத்தோரே என்ற வர்ணமெட்டு.

கண்ணிகள்.

ஆலோலம் ஆ லோலம்
அண்டிடும்புள் ளினங்காள் ஆலோல மாலோலம் சோசோ (ஆ)
காலோய வேயா னின்று
காவல்காக்கும் தினைசேர் காவினை மேவிடே லின்று (ஆலோ)
பாலோ டுறுநீர்நீக்கும்
பாங்குசே ரோதிமப் பட்சிகாள்செல் வீராலோலம் (ஆ)

வள்-வசனம் — தோழிகாள்! பார்த்தீர்களா? எத்தனையோமுறை கத்திக்கத்திச் சத்தம்போட்டுத் துரத்தினும் போகாமல் படைபடையாக வந்துவந்து விழுந்து தொந்தரை செய்கின்றனவே. (திரும்பி) பார்பார், அங்குபார் எவ்வளவு பெரிய கூட்டம் வருகிறது. இனிமேல், "புல்லர்க்கு வாய்ச்சொற் பொருந்தாது தண்டனையின் அல்லற்கே நின்றிணங்கு வார்"

என்றபடி கவணிற் கற்களைவைத்து வீசியடித்தால்தான் ஊடாமலோடும் இந்த அறிவுகெட்ட பறவைகள்.

சகி—நிசந்தா னம்மணி! கையிற் கவணிருக்கும்போது ஏன் கத்திக் கஷ்டப்படவேண்டும்? இதோ இந்தக் கற்களால் விசிறி யெறியுங்கள், நாங்களும் வீசிச் சுழற்றுகிறோம்.

இராகம்-காம்போதி. தாளம்-ஆதி.

கண்ணிகள்.

ஆலோலம் ஆலோலம் ஆலோலம் ஆலோலம்
ஆலோலம் ஆலோலம் ஆலோலம் ஆலோலம்
சோ சோ சோ

சோலையி லிருந்துவந்து சூழுங்கிளிக் கூட்டங்களே
வாலைவாலை யாட்டிவரும் வாலாட்டிச் சிட்டுகளே
சோ சோ சோ

கானம்பாடி யேநெருங்குங் கருங்குயிலின் தன்னினங்காள்
வானம்பாடிக் குருவிகளே வல்லூறுப் பறவைகளே
சோ சோ சோ

மயினை கௌதாரிகளே மாடப்புறு காடைகளே
தயிலான் கருச்சான்காள் தந்திரஞ்சேர் காகங்களே
சோ சோ சோ

பாட்டன்வீட்டுத் தானியமோ பவுரிஷமா யிங்கணுகி
பாட்டம்பாட்ட மாய்விழுந்து பருந்தினையைக் கொய்யவந்தீர்
சோ சோ சோ

கவணிற்கல் வைத்தெறிந்து காலனைத்தும் முறித்திடுவேன்
கவனம் கவனமினிக் காததூர மேகிடுங்கள்
சோ சோ சோ

வசனம்—சகிகாள்! நாம் யாவரும் ஒருமித்து நாலுதிசைகளிலும் கவண்கல்லை வீசியடித்ததினால் ஒரு பக்கமும் பறவைகள் வந்தணுக மார்க்கமில்லாமல் கலைந்து பறந்தொளிந்து போயின. இனிமேல் அப்பட்சிகள் இந்தப்புறத்திற் பயமின்றி நெருங்கி வரவும் வாரா.

சகி—ஆம் அம்மணி! பறவைகள் ஒன்றோடொன்று நாடாமல் சிதறி தப்பித்தோம் தப்பித்தோம் என்று ஓடி மறைந்துவிட்டன. இனிவருவதென்றால் கொஞ்சம் தாமதப்பட்டுத்தான் வரும்.

வள்—அப்படி வந்தால் அப்போது என்பா லறிவியுங்கள். அதுவரையும் சிறிது சிரமபரிகாரம் செய்துகொண்டிருக்கின்றேன்.

சகி—அப்படியே செய்கிறோம் தாயே சற்று இளைப்பாறுங்கள்.

(வள்ளி பரணின்மீதி லுட்காருகிறாள்)

## நாரதர் பிராப்தம்.

மருகேலரா என்ற வர்ணமெட்டு.

இராகம்-மால்கோஸ். தாளம்—ஆதி.

பல்லவி.

கருணாகரா காவாபரா (கரு)

அநுபல்லவி.

அருணாக யோக அணைமீதி லாக
திருநாக ரீக சேர்துயில்தெய் வீக (கரு)

சரணம்.

உன்னதம் பெருகு ஓஷதம் பருகு
உம்பரும்ப ராவும் சம்ப்ரமசீர் மேவும்
இன்னமுதக் கண்ணா எழில்மேக வண்ணா
சொன்னயவீ ரண்ணா தோத்ரப்ர பண்ணா (கரு)

"சர்வம் விஷ்ணுமயம் ஜகத்" என்ற தத்வார்த்த சுபவாக்கிய ஸ்தாபன சாட்சாத் சகலலோக சாரண்ய ஜனார்த்தனப்ரபோ! ஸ்மரணம். சம்பூரண திரிகரணம்.

ஆஹா! பேஷ் என்ன ரமணீயத்தோற்றம்.

நாம் "வைகறைத்துயிலொழி" என்ற வண்ணம் அதிகாலையிலெழுந்து முறையே திரிலோகங்களுக்கும் சென்று மும்மூர்த்திகளையுந் தரிசித்து மீண்டு ரகசியம் எனும் எவ்விஷபத்தையும் அவசியம் பொது நன்மையின்பொருட்டு வெளிப்படுத்துவதினிமித்தம் விளையும் விபரீதச் செய்

கைக்குக் கலகம் என உலகம் பெயரிட்டு "நாரதா கலகப்பிரியா" என்று போற்றியுவக்குங் கீர்த்தியுரை எவ்வுலகத்திலும் சர்வ சாதாரணமாகச் செவ்வைபெறப் புகழும்படியாக உண்டான அவ்வளவு தீவிரப் பிரசித்திக்குங் காரணம் நமது சகலலோக சஞ்சார சக்தியே.

அத்தகைய மேன்மைமிக்க சகலலோக சஞ்சார சக்தியை வாய்க்கப் பெற்றிருந்தும் வீணாகப் பல்வேறு வெற்றிடங்களைச் சுற்றி யலைந்தோமேயன்றி இத்தகைய மகோன்னதச் சோங்கின் மனோரம்ய நேத்ரானந்தக் காட்சிவாய்ந்த இவ்வளமோங்கிய செழிய வனப்பிரதேசத்தைக் கண்ணுற்றேமில்லையே!

சதா பேரின்பத்தையே நாடும் நம்போன்ற சாதுக்கள் வாழ்தற்குரிய சாதனங்களமைந்த தனிவனம். மகிழ்ந்தேன் நனிமனம்.

விசும்பளாவிய தருக்களின் வளர்ச்சியும், பசும்புற்றரைப் பாங்கின் குளிர்ச்சியும், செடிகொடிகளின் புட்ப மலர்ச்சியும், அதைக் காணுங்காலுண்டாகும் உள்ளக்கிளர்ச்சியும், நம்மொரு நாவாற் கூறற்பாற்றோ! இஃதே இயற்கை யமைப்பின் வனப்பினம். இதோ இதற்கருகாண்மையில் தென்படுவதே செயற்கையைப் பெற்ற தினைப்புனம்.

குன்றதின் சார்பினோர் குழுமிய துங்கவனம்
சென்றதிங் காராய முழுமையு மென்கவனம்

(சுற்றிச்சுற்றி நோக்குகிறார், வள்ளி ஆலோலம் பாடுகிறாள்.)

(செவிசாய்த்து) ஏது இந்த நிர்மானுஷ்யமான அரண்யத்திலே பிரமானந்தமான சுரலோசை யொன்று கேட்கின்றதே!! இதென்னவாயிருக்கும்? குயிலோசையோ? (கவனித்து) அல்லவே. இன்றேல் நமது கரத்தில் இருக்கும் வீணையின் தந்திகள் காற்றினாலசைக்கப் பெற்றதிலிருந்து ரீங்கார நாதங்கிளம்புகின்றதோ (வீணையைப் பார்த்துவிட்டு) அப்படியுமில்லையே? இப்பொழுது அந்த விதமாகத் தந்திக் கம்பிகளை யசைக்கத்தக்க கடுங்காற்றேயின்றி மந்தமாருத இளந்தென்றலன்றோ ஜிலுஜிலுவென வீசிக்கொண்டிருக்கிறது.

(வள்ளி ஆலோலம் பாடுகிறாள்.)

அவ்வோசையானது இப்பக்கமிருந்துதான் வருகிறது. கவனித்த மாத்திரத்தில் இது ஒருபெண்பாலின் குரற்றொனியேயென்று

உறுதிப்படுகிறது (அந்தப்பக்கமாகத் திரும்பி) ஓஹோ. சரி, சரி. இறுதியிற்றீர்மானித்ததே உறுதி. (சிறிது நடந்து சென்று வள்ளியைப் பார்த்ததும்) அறிந்தேன் அறிந்தேன். ஆஹா பேஷ், ஆஹா என்ன வசீகரம். என்ன சோபை. என்ன காந்தி. இன்றன்றோ இன்பசம்பவ ரமணீயக்காட்சியை எய்திய நங்கட்புலன். சிறிது நேரத்தின் முன்னம் செவிப்புலன் உவகைபூப்பத் திவ்வியகர்ணமிர்த விருந்தூட்டியது இம்மாதரார் மணிதான்போலும். (ஆச்சர்யக்குறியோடு) ஆஹா! அற்புதவிந்தை.

கலித்துறை.

வானின்று மின்னல் நிலமே லிறங்கிநேர் வந்ததொப்பத்
தேனின்று பொங்குபூங் கையோ கவண்பற்றிச் சேப்புறவும்
கானின்று நோகவு மாலோலம் பாடிக் கதிர்த்தினையை
யேனின்று காவல் செயநேர்ந்த தோவிந்த ஏந்திழைக்கே.

வசனம்—(யோசனையோடு) இம். இத்தகைய உத்தமமான சுந்தர சொரூபலாவண்ய மெல்லிய உருவத்தையும் நல்ல யுவப் பருவத்தையும் பெற்று எவ்வனத்தினைப் பூரணமாயடைந்துள்ள இத்திருமதி இவ்வனத் தினைப்புனங்காக்குங் காரணம் யாது? சரி நாம் இதை யெப்படியாவது விளங்கவேண்டுவது நமது கடமையைச் சார்ந்தது. அதனால் ஆரணங்கின் அருகிற் சென்று காரணங்களைக் கவனிக்கலாம்.

(நடந்து வள்ளியின் சமீபம் வருகிறார்.)

ஜெய ஜெய ரகுவர சீதா ராம்
ஜெப தப சுபகர ராஜா ராம்.

வள்ளி—சகி! இப்படிவா! இதோ பார்த்தனையா இந்த நிர்ஜனப் பிரதேசமான இவ்விடத்திலே யாரோ ஓர் பெரியவர் திருநாமந் தரித்து ஜடாமகுட வேணியாயும் மகதயாழ்ப்பாணியாயும் பரவச மனோலய கானம்பாடிக்கொண்டு நம் பரணையே நாடி வருகின்றனர்.

சகி—ஆம் அம்மணி! அன்னார் பெரிய தபசிரேஷ்டர்போற் காணப்படுகிறாரம்மா!

வள்-எதிர்சென்று முனிவரைத்தரிசிப்போம் வாருங்கள் (வணங்கவும்)

நாரதர் வசனம்—பெண்களினுயகமே மங்கள முண்டாகட்டும்.

ஸ்ரீராம பாதமா என்ற வர்ணமெட்டு.

இராகம்-அமிர்தவாகினி. தாளம்—ஆதி.

பல்லவி.

அம்மா நீயெந்தவூர் அன்புமிகு முன்றன்பேர்
யா தோ புகல்வாய் நேர் (அ)

அநுபல்லவி.

வள்—எம்மூர் பேரின்பார் ஏற்குஞ்சிற்றூ ரென்பார்
நார—ஏதோ தந்தை மாதாநாமம் ஓதுவாயன் னோர்கள் யார் (அ)

சரணம்.

வள்— தந்தை நம்பிராஜன் வனசார்கட் கதிபதி
தாய்நங்கை என்பேர்வள்ளி சாற்றினே னிதுததி
நார— சுந்தர மாமதி தோற்கும்வத னீயதி
தோஷமிக்கு மாவனத்து வாசமுற்ற தேன்விதி

பல்லவி.

வள்— சேர்ந்ததிங் காவல் தினைப்புனங் காவல்
தெரிவீர் வனம்மேவல். (சேர்)

அநுபல்லவி.

நார— ஆர்ந்தனூ யம்மிதா ஆடவ ரிலதா
ஆனதினைக் காவல்முறை மானினிகட்குளதா

பல்லவி.

கூறுவர்யிங்ஙனம் கோபியாதென்முனம் கொண்டேன் கேட்கமனம் (கூ)

சரணம்.

வள்—சூடிலாக் கீடவேட னின்ப்ரசார முழக்கம்
இக்குயானி ருப்பதான் தெங்கள் ஜாதிவழக்கம்
நார—பீடியற் புழக்கம் பேண்புத்தி விளக்கம்
பெற்றோர்களுக் கற்றதென்றே சொற்றிடலாங் கலக்கம்

பல்லவி.

ஆஎன்ன வேடிக்கை ஆமோஇதும் வாடிக்கை
அடர் கான் நா டற்கே. (ஆ)

வள்—ஸ்வாமின்! அடியாளது தந்தை இவ்வேள்விமலைச் சாரலின் வனப்பிரதேசங்களை எல்லையாகக் கொண்ட சிற்றூரையாளும் நம்பிராஜ பூபதி. தாய் நங்கைமோகினி. என் பெயர் 'வள்ளி' யென்பார்கள். நான் எனது பிதாவின் கட்டளைப்பிரகாரம் எங்களுக்குச் சொந்தமான இந்தத் தினைப்புனத்தைக் காக்கும்பொருட்டு வந்திருக்கிறேன் இங்கு. அடிகளின் திருநாமந் திருத்துழாய் தரித்து விளங்கும் சொருபத்தைக் கண்ணுற்ற மாத்திரத்தே யாதொரு பரந்தாமனின் சிறந்த பக்த சிரேஷ்டரென்பதை மட்டுமுணர்ந்து கொண்டேனேயன்றித் தேவரீரின் திருநாமமின்ன தென்பதை யறிந்தேனில்லை. ஆகலான் எளியேன்மேற்கருணை பாலித்துத் திருவாய் மலர்ந்தருளப்பிரார்த்திக்கின்றேன். "மன்னிக்கவும்"

நார:—அம்மையே! நினது பொன்போன்ற அன்பான இன்பவுரைகட்கு நிரம்பவும் மகிழ்ந்தேன். தாயே! நானே திரிலோக சஞ்சாரி. நாரத முனியென்று என்னையழைப்பர்.

வனசாக்ஷி என்ற வர்ணமெட்டு.

இராகம்—இந்துஸ்தான் தோடி. தாளம்—ஆதி.

பல்லவி.

நமஸ்காரம் நலற்புத மலர்ப்பத (நம)

அநுபல்லவி.

நாகரீக சுக மாகயூக மிக (நம)
நான்முக புத்திர மேன்மையின் மித்திர! (நம)
நாரத பிர்மமே நேரதி தர்மமே (நம)

சரணம்.

சமஸ்த சங்கீதசுர சாகித்ய வாரி
தவநிய மனத்திரி புவன சஞ்சாரி
நமஸ்தெனப்பலதுதி நவின்றனன் கோரி

நாரண வன்ப நாவல நண்ப
வீரண வின்ப மேலு நிரம்ப (நமஸ்காரம்)

வசனம்:—இனிவுறுதவ சிரேஷ்ட முனிவர் திலகமே! சரண். சரண். (முழந்தாளிட்டு வணங்கியெழுந்து) சந்நிதானங்களின் சன் மார்க்க கீர்த்திப்பிரதாபங்களைப் பிறர் கூறக்கேட்டு வாயார வாழ்த்தி மனதாரத் துதித்திருக்கின்றேனேயல்லாது சமுக திருமுன்னின்று சரண சேவைபுரியும் பாக்கியத்தை இது காறும் பெற்றேனில்லை. அப்புனிதபாக்கியத்தை இப்பொழு தே தீர்க்கமாயடைந்தேன். ஐயனே! பேதையாகிய அடியாளை ஒருபொருட்டாக மதித்து தங்களின் செழுந் தளிர்ப்பதங் களுேக இங்ஙனம் எழுந்தருளியதின் காரணத்தையுரைத்து என்னைத்தன்யையாக்கப் பெரிதும் இறைஞ்சுகின்றேன்.

நார—கிளிமொழிப்பாவாய்! நானே திரிபுவனங்களிலும் திரிபவனாத லால் இன்று ஏதோ தெய்வச்செயலாய் இங்குவர நேர்ந்து விட்டது. அவ்வணம் வரும் மார்க்கத்தில் யாழோதையை நிகர்த்த உனது ஆலோலத் தொனியைக் கேட்டு மனமுவந்து இவண் அணுக உன்னைக் கண்டேன். ஆசியுரைகள் விண் டேன். அவசியமான சிலவிஷயங்களை யுணக்கியப்புவதாக ஓர் எண்ணமுங்கொண்டேன்.

வள்—பரம மாதவ பிரமமே! செவிக்கொள்ளச் சித்தம் அடியாள்.

நார — குளிர்மதிமுகத்தாய்! கவனிப்பாயாக! பூமியின்கண் பெண் ஜென்மமாகப் பிறந்தவர்களுக்கு அமைந்துள் பருவ காலங்கள் ஏழு. அவ்வேழு பருவங்களுள் மூன்றாவதாகிய "மங்கை"ப் பருவமே இகவாழ்க்கையின் இல்லற சுகபோகங் களைத்துய்க்கச் சாலச்சிறந்த வாலிபகாலமென ஞாலத்தாற் கருதப்பெறும் துங்கப்பருவம். தற்போது நீயோ அத்தகைய மங்கைப் பருவத்தைப் பூரணமாக அடைந்திருப்பதாகக் காணப்படுகின்றாய். ஆதலால் மாதர்ப் பிறவிக்கு மகிமையைக் கொடுக்கும் மாதாக்களாகிய கலைமகள்பிரமனையும், அலைமகள் அரியனையும், மலைமகள் பரமனையும் அடைந்து வாழ்வதை நீ மனதிற் கருதற்பாலது.

வள்—நான் அதைக்கருதுவானேன்?

நார—சரீரமே அழியுந் தன்மையுடையது. அதனையொட்டிய இளமையைப்பற்றி யெடுத்துரைக்கவும்வேண்டுமோ? பொன்போன்ற வாலிபகால ஒவ்வொரு நிமிடத்தையும் வீணாக்காமல் ஆனந்தகரமாக இன்பங்களை யனுபவிக்க வேண்டியதில் கண்ணுங் கருத்துமாக இருந்து முயற்சிப்பது நின்போன்ற யுவர்களின் சுயச்செயல். அதுபோலவே நீயும் ஓர் உத்தம மகுணனை யடைந்து சித்தமகிழ்வாக வாழ்ந்து சத்மனோகர மேன்மை யுறுதலேபத்மினிகளின் முறையென்றெண்ணுகிறேன். நினது மாதா பிதாக்களின் நோக்கமெத்தகைத்தோ! அன்றி சர்வத்ராலங்கிர்த லக்கண சகிதவனிதையும் உருவத்திற் கேற்ற சற்குண சுகித புனிதையும் ஆகிய உன்னிடத்திற் சொல்வதற்கான வேறுகுறையென்னவிருக்கிறது மின்னே!

வள்—பற்றுறவு முற்றுந்துறந்து நற்றவத்திலுற்றுயர்ந்த தம்போன்ற துறவிகள் மித்தையாகும் மாயாசம்பந்தத்திற்குட்பட்ட இத்தியாதி விஷயங்களிற் பிரவேசிப்பது தகாது. பிரஸ்தாபிக்க அஸ்திவாரமிட்டு ஆரம்பித்துள்ள கட்டுரையை மேலும் விரிக்காது மற்றைய வுரைகளேதேனுமுளதேல் கூறுவீராக.

நார—தாயே! சினமுறேல். நான் தெரிவித்த யாவும் ந்யாயமே. சிறிது யோசித்துப்பார். அதன்உண்மை நன்குவிளங்கும். இங்கொன்றும் அதிக்கிரமமாகக் கூறிவிடவில்லை. நான் சொல்வதைக் கேள். அதாவது:—

இராகம்—பிலஹரி, தாளம்—ரூபகம்.

கண்ணிகள்.

உற்ற பருவமதில் ஒன்றியா யேனிருக்க வேண்டும்
வள்—ஒன்றியாக யானில்லை உதவத் தோழிமாருண்டு யாண்டும்

நார—ஒற்ற தோழிகளாலே பற்றுதலேதுமுண் டாமோ
வள்—உண்டாகாதென்னயாங்கள் கொண்டுளபற்றுதல்வீண்போமோ

நா—இந்தப் பற்றுத லாலே யேது சுகித மெனக் கண்டாய்
வ—எந்தப் பற்றுத லாலே யாது விசேஷம் வருந் துண்டாய்

நா—தக்க மணவாள னைச் சார்தலெ இன்பசுகம் தாயே
வ—தாறு மாறாக வுரை கூறுவதேனோ யானும் சேயே

நா—தாறு மாறில்லை யான்ய தார்த்த முரைத்தேன் கேளா யம்மா
வ—சாது தவமுனிகட் கீதுமுறையோ போம்போம் சும்மா

நா—சும்மா போகே னுனக்கு ஜோடி யோதினேன்கந்த வேலை
வ—சூதுபே சாது விட்டுத் தொலைவீருமக் கிலையோ வேலை

நா—வேலை யில்லை யுனையும் வேலனையும் சேர்ப்பேனிவ் வேளை
வ—வீரணர் சீர் தெரிந்தும் விளம்ப நுமக்கற்றதேன் மூளை

நார-வ:-ம்—கள்ளமிலா உள்ளமுறு வள்ளிநாயகமே! 'ஆறுவது சினம்' என் கோபம்! "காலம் தவறிச் செய்தால் காரிய நஷ்டம்" ஆதலால்—நினது அழகுக்கும் குணத்துக்கும் இசைந்த பொருத்தமான வரனை நிச்சயித்துவிட்டேன். அவனை மணந்து உலகம் போற்றும் உயரிய பேரானந்தத்தை யெய்துவாயாக: அவ்வரன் யாவனோ எனத்திகைக்கேல். அவனே கழுகாசலாதிபதியாகிய ஸ்ரீமது சாட்சாத் குமரவேள். சண்முக நாதன். சுப்ரமண்யப்ரபு. வேலாயுதப் பெருமான். சரவணோற்பவத் தம்பிரான். திருமுருகக் கடவுள். நீயே அவனுக்கிசைந்த சதி. அவனே உனக்குகந்த பதி. இதை நன்கு ஆலோசித்தே தீர்மானித்ததென்மதி. பதிலேதும் மறுத்துரையா தொப்பிடுவாய் ததி.

வ—முனிவரே! என்னிடம் பிரஸ்தாபிக்கவேண்டாம் என்ற அதே விஷயத்தை மிகவும் சவிஸ்தாரப்படுத்தி அழுத்தமாக விரிக்க ஆரம்பித்துவிட்டீரே! போதும்-உமது பிரசங்கம். நிறுத்துங்கள் அவ்வளவிலேயே. மீண்டும் விளம்புவீரானால் அது மரியாதையைப் பாதுகாப்பதாகாது. இனியும் என் கோபத்தைச் சகிக்கேன். உமது தவவேடத்துக்காக இதுவரையும் கூறிய விஷமங்களைப் பொறுத்துக்கொண்டிருந்தேன் தெரியுமா?

தோந்திசரிய மயிரே என்ற வர்ணமெட்டு.

இராகம் - ஆனந்தபைரவி. தாளம் - ஆதி.

கண்ணிகள்.

நார— செந்தினை யுறை வணமே வியவளியே
கந்தனை நறு மணமே புரிவையெனில்
வந்தனை யது கணமே யுலகுசொலு முணர்வாயே

வள்— சிந்தனை யற வனமே கியரியத
வந்தனைநிறு வினமே தகமுனியே
பந்தனையக வனமே னிதில்விலகி யகல்வீரே

வசனம்:—வீண்வம்பு பேசும் வில்லங்க முனிவரே! என் விஷயத்தில் தாங்கள் இவ்வளவு பரிந்து பேசியதற்காக உமக்கு அனந்தங் கோடிநமஸ்காரம் செய்கிறேன். நாங்களும் காவலுக்குப் போக வேண்டும். தாங்களும் சேரவேண்டிய இடத்திற்குச் செல்ல வேண்டும். நாழியாகிறது சென்று வாருங்கள். (திரும்பி) சகிகாள்! இதேது பிள்ளையார் பிடிக்கப்போக அது பெருங் குரங்காய் முடிந்த கதையைப்போலன்றோ இருக்கிறது. நாம் மாமானுபாவரென மதித்து வணங்கிய இன்னவர் "மாமா" வேலைக்காரராகவல்லவோ கடைசியில் தெரிகிறது.

சகி—ஆம் அம்மணி! (திரும்பி) ஸ்வாமி! தாங்கள் இனிமேல் இங்கிருப்பது சரியல்ல. எங்கள் நாயகி உமது சப்பாஷணையை வெறுக்கிறாள். சந்நியாசிக்கேன் ஊர்வம்பு, உமக்கெதற்கிந்த விசாரம் போங்கள்.

நா—போகிறேன் நீங்கள் கொஞ்சம் பொறுங்கள். பூசை வேளையில் கரடியை யேவியதுபோல் நீங்கள் ஒருபக்கம் பிதற்றுகிறீர்கள். (திரும்பி) தாயே சுழற்காற்றானது சிறிது நேரம் வீசிப்பின் மறைந்து விடுவது போன்று இளமையும் கொஞ்ச நாளில் முதிர்ந்துவிடும். ஆதலால் அக்"காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்." என்றபடி இளமைப்பருவத்தின் போதே இகபோக இன்பங்களை அனுபவிக்கவேண்டும், நீயோ

ஷை கண்ணிகள்.

அந்த வினிமை தெரியா தெனைமிகமு
னிந்து வெகுளல் சரியா பணிவதன
சுந்தர நிறை வரியா ரயில்விழிகொள் மடமானே

வள்— இந்த வுரைவி வரியா தகலுமென
தந்த முறைமை புரியா துழறிவினி
நிந்தை யறைவன் மரியா தையறவினுஞ் சகியேனே

நார—ஏ வள்ளித்தாயே! நான் சொல்வதைக்கேள். உனது நன்மையை நாடியே அதிகமுய் வற்புறுத்துகிறேன், என் வார்த்தையைத் தள்ளாதே.

வள்—ஐயா! எனது நன்மையை நாடி எனக்குச் செய்ய வேண்டிய சகல சௌகரியங்களையும் தாழ்வின்றிச்செய்வதற்கு எனது அன்பார்ந்த தந்தையும் தாயும் சகோதரரும் உறவின்முறை யாரும் சித்தமாயிருக்க எனது நன்மைக்காக வழியிற்போகும் நீர் என்னசொல்வது நான் என்னகேட்பது. இனிமேல் உம்முடன் வார்த்தையாட எனக்குக் கொஞ்சமேனும் இஷ்ட மில்லை உடனே இவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டுவிடும். இன் றேல் மரியாதை கெட்டுவிடும்.

நார—அம்மையே! நான் உனக்கு மணவாளனாக மதித்துள்ள அந்த மயில் வாகனப்ரபுடீகனைச் சாதாரணமாக மதித்தே வாதிக்கி றாய் என்று எண்ணுகிறேன். அவ்விதம் நீ அந்தப்பிரணவ சொருபனின் பெருமையாகிய கல்யாணகுணகீர்த்திப்பிரதாப ங்களையறிந்திருப்பையாயின் ஈது கூறிய என்னையே தூது போகத்தோத்திரம் பண்ணியிருப்பாய். ஆனாலும் என்ன. இப்போது எனக்குத் தெரிந்தவரையில் தெரிவிக்கிறேன். அதனைக்கேட்டேனும் நினது மனதைத்தேற்றி மங்களமான மறுமொழியைக் கூறுவாயாக.

வள்—இதேது சனியன் லகுவில் ஒழியாதுபோ லிருக்கிறதே.

நார—கவனித்துக்கேள்,

நம்பிக்கை கொண்டெல்லோரும்கை என்ற வர்ண மெட்டு.
இராகம்-தேசிகம். தாளம்-ஆதி.

பல்லவி.

கார்த் திகைக் கந்தன் சம்பந்தன் காட்சிக்கானந்தன்
காட்சிக் கானந்தன் சுப
மாட்சிக் காவந்தன் நிறைதிருக் (கார்)

கரியுரி தரியா னருளிய குருபர (கார்)

கருது சுமதி நிறையு சமுக
ரிருத யமதி லுறைய றுமுக (கார்)

கடிய வாதின் கொடிய சூரன்
மடிய மோதுங் கெடிய பாரன் (கார்)

காமுயரப் பொருதிசிதம் பணிபவரை
சிரமமறப் புரிவரதத் தணிகவரை (கார்)

காலா யுதக் கொடியுட னடைசத்தி
வேலா யுதப் பிடியுடை திடசித்தி (கார்)

கந்தர்வ ராதிய வந்தரர் பூபதி
இந்திரப் ரீதிய தந்த்ரசே ஞபதி (கார்)

காவடி சேர்கழு காசல மேவிய
பூவடி சீர்தொழு தாசர்கள் ஜீவிய (கார்)

கஞ்சணை யுஞ்சிறை துஞ்சிட வைத்தவன்
குஞ்சரி கொஞ்சுமி ரஞ்சித மெய்த்தவன் (கார்)

காவலன் கவசப் ர தாப
சேவலன் சிவசுப் ர தீப (கார்)

கனமிகு சுகிதச டாட்சர மந்திர
மனமகிழ் சகிதக டாட்சசு தந்திர (கார்)

அநுபல்லவி.

சித்திரவேள் உயர் கார்தன் ஜீவ
காருண்ய பிரணவ சேந்தன் திவ்ய
காரணமதுரித வீரணசதுர்வித காவியப்பார்ந்தன் வேந்தன்மெய் (கார்)

துலங்கு செம்பொன் கோபுரமேவிய என்ற வர்ண மெட்டு.

இராகம்—தேசிகம். தாளம்—ஆதி.

கண்ணிகள்.

நா— கடம்பகந்தன் சேவற் கேதனன்
கண்டோர்கட் கருள்புரி முருகனைக்
கல்யாணம் செய்து கொள்ளுவாய்
பொற் புறுமிக பாகக
நல்யாணர் எய்தும் உள்ளுவாய்.

வள்— திடம் பொருந்துந் தவம்பல புரிந்து
தெய்வீகத் தன்மை பெற்றுத்
திரிலோகஞ் சுற்று முனியே
இப் படியென திடமொழி
தரிலோ பொறுக்கே னினியே.

நா— காவலன் துவச சேவலன் சுமண
நாவலன் கவச மாவலன் ரமண (கல்யா)

வள்— தேவை யில்லை யெனும் பூவை யென் னிடத்துத்
தேவை விள்ளு வதி லாவ தென் னடுத்துத் (திரி)

நா— கனமிகு முனக்கின்று சுபகா வேளை
யெனமதி தனிற்கொண்டு சுகுமா வேளை (கல்யா)

வள்— இனமெவ ரிடத்திலு வலியவே நுழைத்து
வினைதனை முடித்திடக் கலகமே விளைத்து (திரி)

நா— கடிந்தனந் தஞ் சேதிகளோதி
கண்ட படி யேசினுங்
கட்டாய முன்றனைத் தானே
வடிவேலர்க்கு மாங்கல்யங்
கட்டாமலே கிடேன் நானே.

வள்— விடிந்தெழுந்தும் வாடிக்கை போல
வில்லங்கம் யாது மின்றி
வீய்போர் தேடிவந்தீ ரிங்கே
வீண்குண்டுணி முனிவரே
யோம்போம் கைவரிசையு மெங்கே.

வள்—(தனக்குள்) ஏது இருக்கஇருக்கக் காரியம் பலமாக வேருன்று கிறதே.

நார—பொன்னனைய மின்னே! இன்னும் என்ன தாமதம், உன்னினை விலிருக்கும் சந்தேகத்தை யின்னதெனவுரைக்கில் நன்கு விளக்கத் தயார்.

வெண்பா.

வம்பிழுத் தாடியோடி வந்தெங்கள் சாமியாம்பொன்
அம்பலத் தாடிடமைந்த னாமுருகத்—தம்பிரானை
யோமாலை பூண வுரைத்தீ ரதுமுறைமை
யாமா வுமக்கழகீ தன்று.

இராகம்-தோடி. தாளம்-ஆதி.

பல்லவி

போம் போமினியே புரட்சிக்கார முனியே—மிகு
புத்திசொலும் வித்தையைநி றுத்தியேபு னத்தைவிட்டுப் (போ)
பொய்ப்பகட் டெலாம்பகட்டி கப்பிகட்டி டாமலெட்டிப் (போ)
போக்கிரிக் கேலியை நீத்து சீக்கிரநும் ஜோலியைப்பார்த்து (போ)

அநுபல்லவி

ஆம்போ தெது மாகட்டும் விதிவழியே
அந்தமொழியேன் வந்தவழியே (போ)

சரணம்

தாம்பல வுயரிய தவங்களைப்புரிந்து
சாற்று டாப்பர்த்தொழிலை யேற்றீரோ திரிந்து
மேம்படு கோவல வீரண சீர்தெரிந்து
விலகிச்செல்வீரிப்போது கலகச்சொல்லைச்செப்பாது(போ)

வசனம்—உலகின்கண் தவத்தினாலேயே மகரிஷிகளனைவரும் மேன் மையடைகிறார்கள். அதுபோலவே நாமும் அந்தப்பெருமை யையடைய வேண்டுமெனும் பொருமையினால்; "ஆங்கார முள்ளடக்கி ஐம்புலனைச்சுட்டெரித்துத் தூங்காமல் தூங்கிச் சுகம்பெறுவது" என்ற யோக நெறியிலிறங்கிச் சிறிதுகாலம் பயின்று ஆரம்பத்தில் தோற்றிய சிரமத்தைச்சகிக்கமாட்டாது

சிந்தையை யடக்கியே சும்மாஇருக்கின்ற திரமரிதாமெனத் தெரிந்து முதலில் துன்பம் போல் தோற்றி முடிவிலின்பத் தைக்கொடுக்கும் சிரேஷ்டமான அந்தத்தவப்பணியை அற வே ஒழித்துவிட்டுக் கூட்டிக்கொடுப்பதான இந்தஅவப்பணி யை மேற்கொண்டலைகிறீர் போலும்! இனிப்பன்மை விகுதி யிலழைப்பதும் பொருந்தாது.

நார—பெண்ணாமுதே! பிடிவாதத்தைவிடு, வடிவேலனை அடு,படிமேல் ஸ்ரீ முருகனின் பத்னியெனு நற்பேரையெடு, தாயே! தானு வரும் சிதேவியை காலாலுதைத்தல் போன்று தள்ளிவிட் டுப் "பெண்புத்தி பின்புத்தி"யென்றபடி மோசம்போனேமே என்று பின்னால் மனதுநோகாதே! நான்சொல்வதைக்கேள்.

வள்—வல்லங்கவழக்கிழுக்கும் வில்லங்கநாரதா! சரிசரி. உனதுவரிசை களையெல்லாமென்னிடங் காட்டாமல் வாயைமூடிக்கொண்டு வந்தவழியே ஓடு. இன்றேல் உனக்குவரும் அநேகபழியான கேடு. இதற்குமிஞ்சி நிற்பாயாகில் கிடைக்குங் கவணற்போடு. ஜாக்கிரதை. அறிவிலியே இதுகாறும் உன்போன்று இவ்வாறு "கடைத்தேங்காயை யெடுத்து வழிப்பிள்ளையாருக்குப்படை க்கக்" கங்கணங்கட்டிக்கொண்டு திரிபவன் எவனையும் கண்ட தேயில்லை.

விருத்தம்.

திண்டுநீள் யாழு மேந்திச் சடைமுடித் தவசி வேடங்
கொண்டுநி யாய மின்றிக் குறும்புரை யான வார்த்தை
விண்டுநின் றதிகங் கையை வீசிடுங் கலகக் கார்க்
குண்டுணி முனியே சீபோ குலவுசீ ரழியு முன்னே.

நார—வசனம்:—ஓகோ! அப்படியா? (படபடப்புடன்)

விருத்தம்.

நன்றுநன் றறிவேன் வள்ளி நாயக மாதே செம்பொன்
மன்றுநின் றாடு மீசன் மைந்தனுங் குமா வேளுக்
குன்றனை மாலை சூட்டி யுவகையோ டிங் கிடவே வைப்பேன்
அன்றெனில் நார தன்யான் அல்லவென் றறிகு வாயே.

(கோபத்துடன்செல்கிறார்.)

(சிறிது தூரத்தில் நின்று தனக்குள்) "நல்லது கண்டால் நாயக னுக்கு" என்றபடி இந்தவள்ளியின் லாவண்யசொரூபத்தை அந்த என் அப்பனாகிய சுப்ரமண்யமூர்த்தியின்பால் வாயினாற் சிலாகித்துரைப்பதுடன் சித்திரப்படமொன்றும் வரைந்து கொண்டுபோய்க்காண்பித்து எனதுசபதத்தை நிறைவேற்று வதற்காக இப்போதே செல்கின்றேன் கழுகாசலம்.

(விரைந்துசெல்கிறார்)

---

## கழுகாசலம்.

[சண்முக சுப்ரமணியர் மயில் வாகனத்தில் ஆரோகணித் திருக்கின்றார். தவமுனிவர் களும், பக்தர்களும் தரிசனம்செய்கின்றனர்.]

பக்தர்கள் வசனம்—அரஹரவேலாயுதா! வேலாயுத! சரவணோற்பவ சண்முகப்ரபோ! அடியேங்களை யாட்கொளவேண்டும், சுப்ர மணியத்தெய்வமே!

(நாரதர் அவிடத்தைநாடி வந்துகொண்டிருக்கிறார்.)

அதிர்ஷ்டம் வந்திட்டபோது என்ற வர்ணமெட்டு.

இராகம்—தேசிகபியாக். தாளம்-ஆதி.

கண்ணிகள்.

அரிஹரியோம்நமோநா ராயணவென் றிறைஞ்சல்
ஆரண முறையாகும் அனுதினமே
பரிகரிக்க வொண்ணாத பாவபீடைக ளெல்லாம்
பரிதிமுன் பனி போலாம் பணிமனமே
அவனன்றி யோரணுவும் அசையா தெனும்பெரிய
ஆப்தமொழியையுள்க லவசியமே
தவநன்றியோடுஞான சாத்மீகநீள்ப்ரதான
சன்மார்க்கமுத்திக்கான ரகசியமே
தத்வாதீனசாலோக சாருபசாமீபயோக
சாயுட்சியவிஷ்ணுநாம சகஸ்திரமே
வித்வானந்தபாஷிய வீரணகீதசுய
விக்ஞாபனம்பேசிய சுகஸ்திரமே, (அரிஹர)

(சந்நிதானத்தையண்மித் தரிசிக்கிறார்)

தோலினே சேசின என்ற தியாகராஜர் வர்ணமெட்டு.

இராகம்-சுத்தபங்காளம். தாளம்—ஆதி.

பல்லவி.

சிகியா ரோகண தேவா சமுக
தெரிசன சேவா சீர்புரி சுமுக (சிகி)

அநுபல்லவி.

அகியணி பகவா னருளறு முகவா
மகியினி லடியவர் வாழ்த்து சுகவா (சிகி)

சரணம்.

சுகுண பாண சுரபதி மருகா
சுபகழு காசல துரையெனு முருகா
மகுண கருண வரதமெய் யருகா
மதுரித வீரண வாக்யா மிர்தகான (சிகி)

சாமிவிவேகானந்த என்ற வர்ணமெட்டு.

இராகம்—இ. பியாக். தாளம்—ஆதி.

பல்லவி.

ஆறுமுகா சரணம் அருளைப்புரிய ஸ்மரணம். (ஆ)

அநுபல்லவி.

அந்தர வானவர் சிந்தையுடன் பணி
சுந்தர மானசு கந்தகடம் பணி (ஆ)

சரணம்.

கூறுமடி யார்கடமை கொண்டணைத்த லேகடமை குணவுடமை
குன்று தோ றூடும் புண்யா
நின்று சீர் சூடுங் கண்யா
நன்றுசேர் சுப்ரமண்யா நவில் சரண்யா
நாரண திரு மருக னேபுகழ்
வீரண தமி ழருக னேதிக (ஆறு)

வசனம்—கழுகாசலாதிபதே! அடியேன் நாரதன் நமஸ்காரம்.

சுப்ரமணியர் வசனம்—சந்தோஷம்.

தேசோபகார ராஜாங்கம் என்றமெட்டு.

இராகம்—மத்யமாவதி. தாளம்—ஆதி.

பல்லவி.

கல்யாண நாரதப்ரமமே களித்தேன் வாரும் (கல்)

அநுபல்லவி.

சொல்யான் நவின்றேன்வாழி சுவிசேடம் யாதிந்நாளில்
தொடுத்தி விடத்து நடத்து மெடுத்து (கல்)

சரணம்.

துல்யானு போகராசி சூழ்மூன்று லோகவாசி
நல்யாழிற் கானம்பேசி நாடும்சத்சகவாசி
நகைமிளிர் சதுர்முக னகமகிழ் சேயனே
தகைமைசேர் வீரண சுகமதித் தூயனே (கல்)

வசனம்—தபோசிரேஷ்ட நாரதப்பிர்மமே! வரவைப்பற்றிப் பேரானந்தமெய்தினேன். யாது விசேஷம்? இன்று ஏதோ நூமதுவதனமானது என்றுமிலாத ஓர்வித குதூகலக்குறிப்போடு தோற்றப்படுகின்றதே காரணம்?

நார—என் அப்பனுகிய சுப்ரமணியப்பொருளே! விசேஷம் என்ன? யாவும் சாட்சாத் சரவணபவ ஷடானனக்கடவுளாகிய சந்நிதானதரிசன சம்பவத்தாலுண்டானதேயன்றி வேறென்ன விசேஷம்? ஐயனே! தாயறியாச்சூலுமுண்டோ? சகலலோக பரிபூரணனுகிய சமுகதிருவுளத்திற்கெட்டாததாகிய விசேஷ மென்னிடத்தி லென்ன இருக்கப்போகின்றது! ப்ரபோ!

சுப்—சபாஷ் நாரதரே! அவ்விதமே இன்று நமதுமனத்தில் ஓர் நூதனவிஷயம் நின்று வெளிவரத்ததும்புகின்றது என்பதை யான்தெரிந்தே அதைஉரைக்கும்படி தெரிவிப்பதாக வைத்துக்கொள்ளும். ஏன் இப்போது சரிதானு?

நார—ப்ரபோ! தன்யன் தெரிவிக்கின்றேன்.

கவித்துறை

இனியொன்று மாறி யுரைத்தற்கு ஞாயமே இல்லையிங்கே
தனியொன்று மஞ்ஞைபி னூர்திகொள் ளப்பனே சாற்றுதுங்கே
ணனியொன்று மாலரன் வேதர்க்குங் கிட்டாதிந் நாட்புதுமை
பனியொன்று வேள்வி வரைச்சார்பிற் கண்டுற்கே பார்த்தனனே,

மார்க்கத்திற்கண்ட என்ற வர்ணமெட்டு.

இராகம்—அடாணு. தாளம்—ரூபகம்.

கண்ணிகள்.

சுப்—அப்படி யாகில்நீர் கூறிடு வீர்நன்றாய்
அருள்நார தப்ரமமே—அதைச்

நா—செப்பவென் றூல்முற்றுஞ் செப்பக்கொள் வாணுதி
சேடனுந் தான்ச்ரமமே.

சுப்—ஓகோ அந்தவித மானுற் சுருக்கமாய்
ஓதிடு வீர்முனியே—மிகு

நா—வரகோங்கு மூவிரு மாமுக ரேகண்டு
வந்தேனு ஞேர்கனியே.

சுப்-இவ்வித மேன்மையைக் கொண்டுள வக்கனி
எந்த இடத்திலுண்டு—அதை

நா—திவ்விய மாய்க்கூற வேஓடோ டிவந்தேன்
சிற்றா ரதனிற்கண்டு.

சுப்—கைக்கெட்டி டாதஅந் தக்கனி தன்னைநாம்
கவ்னிப்ப தேன்விடுமே—சுக

நா—மெய்க்கட்ட தாக விருகொம்பு களுண்டு
மேவி லகப்படுமே.

சுப்—அகப்படு மென்றீரே பட்சிக ளிந்நேரம்
அதனைப்பு சித்திருந்தால்?—மிக

நா—மிகப்பயந் தேருமே பறவைகள் நாடாது
மெல்லிய வாய்திறந்தால்.

சுப்—வரயென்று சொன்னதால் மற்று முறுப்புக்கள்
வாய்ந்துளவோ அறைவீர்—ஒளிர்

நா—தூய மதிமுக மாதிய ரூபங்கள்
தோற்றும்நீ ரேஅறிவீர்.

சுப்—தெரியலா னேன்பெண்டைக் கனியென்று சொன்னதின்
செய்தி யெனசித்தமே—என்

நா—பிரிய வேலவரே கன்னி கனியெனப்
பேதித்ததுசத்தமே.

சுப்-வசனம்—சந்தோஷம், முனிசிரேஷ்டரே! அவ்வளவு பெருமை வாய்ந்த அந்தப் பெண்ணாமுதைக் கண்ணாரக்கண்டு களிக்காத பட்சத்தில் நான் பன்னிரு நேத்திரங்கள் படைத்திருந்தும் பயன் யாது? அவசியம் கவனிக்கத்தான் வேண்டும் ஆனால் நீர் இப்போது கூறும் அந்த

இந்துஸ்தான் பியாக். தாளம்-ஆதி. ஏகம்.

கண்ணிகள்.

மாதுபேர் யாதுநீர் ஓதுவீர் ஓதுவீர் மாதவ நாரத ரேதய வரகவே

நா—வள்ளியென் றேயங்கண் ணுள்ளவர் விள்ளுவார்
சுப்— வாசஸ்தா னம்எது வாசஸ்தா னம்எது
நா— வாழும் வேள்விமலைத் தாழ்விற்சிற் றூரது
சுப்— மங்கையின் தந்தையார் இங்குநன் றறைவீர்
நா— மாசில்வே டநம்பி ராசனென் றறிவீர்
சுப்— மார்க்கத்தெங் கேக்கண்டீர்
நா— ஊர்க்குத்தென் கானண்டி
சுப்— பார்க்கத் தனியங் கேனோ வந்தனள்
நா— நோக்கித் தினையின் காவற் குந்தினள்
சுப்— ஏற்கத் தப்பற நவிலும் பதிலே
நா— ஏதனு வும்பொய் யிலையீங் கிதிலே
சுப்— ஈதென்ன வேடிக்கை
நா— ஜாதியின் வாடிக்கை
சுப்— எழிற் குமரிதனைப் பழக்கிக் காவலில்
இழைக்க வைப்பதும் வழக்கமோ பலபேஷ்

விருத்தம்.

நா— காட்டிலே பரணின்மீது கவணதை வீசி நிற்கும்
மேட்டிமை யான தூய மெல்லியாம் வள்ளி தன்னைப்
பாட்டிலே யமைத்து வந்தாற் பாடத்திற் கியலா தென்று
திட்டியே வந்தேன் சித்ரம் தெரிகுவீர் முருக வேளே.

(என்று படத்தைச் சுவாமியிடங் கொடுக்கிறார்.)

சுப்—எங்கே? (என ஆவலோடு வாங்கிப்பார்த்து நன்கு கவனித்து விட்டு) ஆஹா!

முத்துக்குமரையனே என்ற வர்ணமெட்டு.

இராகம்—சங்கராபரணம். தாளம்—ஆதி.

பல்லவி.

கண்டா னந்த மெய்தினேன்
கண்ணால் வள்ளி சித்திரத்தைக் (கண்)

அநுபல்லவி.

விண்டதின் படியே பெண்டவள் வடிவைக் (கண்)

சரணம்.

அண்ட மெண்டிசையுங் கொண்ட தொண்டிசையுங்
கெண்டை யென்ற விழியாள் சுந்தராங்கி
ரண்டி யன்ற கிழியாள் என்றணையிங்
கண்ட நின்ற வழியாள் சித்திரத்தைக் (கண்)

வசனம்—நாரதரே! இந்தச் சித்திரத்தைக் கண்டவுடனே எனது மைத்துனனாகிய சித்தசன் அத்திரத்தைக்கொண் டெறிய ஆரம்பித்துவிட்டான். இனிக் கணப்போதும் தாமதிக்க முடியாது. உடனே செல்லவேண்டும். என் உள்ளமதைக் கொள்ளைகொண்ட வள்ளிமயில் உள்ளதான தெள்ளருந் தினை நாடி.

நா—ஐயனே! ஆனால் ஒரு விஷயம். தேவரீர் இவ்வித சொரூபத்தோடு அவ்விடத்திற் கேகுவதைப்பார்க்கிலும் வேடுவரூபந் தாங்கி ஓடிவந்தமானொன்றைத் தேடுவதாய் அங்கு நாடுவதே நலமென வெண்ணுகிறேன். ப்ரபு!

சுப்—முனிசிரேஷ்டரே! நல்ல யோசனை கூறினீர். அவ்வண்ணமே செய்வோம் வருவீர்.

## தினைப்புனம்.

வேதாகமமெய்ப்பொருளாய்ந்திடு என்ற வர்ணமெட்டு.

இராகம்—மத்யமாவதி. தாளம்—ரூபகம்.

கண்ணிகள்.

கோலாகல ஷண்முகத்தை நீத்துக்
கொண்டோம் முனிவரர் பாடம்
திண்டோள் வனசர வேடம்
கோதை வள்ளி மாதைக் காண்பதற்கே (கோ)

குலவிய வனிதை முனிங்கே
கலையணு கினதனை யெங்கே
கொடுவெனப் பலதந்திரத்தால்
கடிமணம் புரிந்ததிற் கப்பால்
கோவில் நாட மேவினேந் ததியே (கோ)

வசனம்— (ப்ரமித்து நோக்கி) ஆஹா! என்னே நேத்ரானந்தக்காட்சி! சோத்ரானந்த நீட்சி.

(வியப்போங்கநின்று)

அரிஹரி என்ற வர்ண மெட்டு.

இராகம்—பியாகு. தாளம்—ஆதி.

பல்லவி.

சரி சரி தவநாரத முனிவரின்னுரை (சரி)

அநுபல்லவி.

சரசா மணி யிவணுரைவது
விரசாகவே கவணெறிவது (சரி)

பரணெனுமிதின் மேலாகத்தனி
குரானணிவரு மாலோலத்தொனி (சரி)

திரிலோகமும் புகழும் சுந்தர
வரிலோசனக் குமரியென்றது (சரி)

சரணம்.

தெரிவையர்க்குளிவளே முக்ய திருவிளக்காய்ச்செப்பலாம்
திங்களிற்களங்கமின்றேல் மங்கைமுகநேர்க்கொப்பலாம்

சீர்சிறப்பெலாம் — ஒன்று
சேர் சுரப்பலாம் — நன்று
ஜெய மேவிய — சுகித வீரண
சுய காவிய — சகித காரணம் (சரீ)

வசம்—ஆகா! என்ன தேவலாவண்ய திவ்ய சொரூபம்! ஓகோ! இந்த
மனோகரியைப்படைத்து தவுவானென்று ஒருசிறிதேனுந்தெரி
ந்திருக்கும் பட்சத்தில் அந்தமலரவனாகிய சதுர்முகனைப்பிர
ணவகேள்வியின் போது சிறைபுரியாது மன்னித்திருப்பேனே
பேஷ் என்னகாந்தி(சிறிதுநேரம்பார்த்திருந்து) அன்று அன்று
அன்னான் சிரத்திற்குட்டுப்பட்டும் சிறைக்குட் கட்டுப்பட்டும்
தவிக்கக்கூடியதண்டனையையடையத்தக்க அபராதிதான் ஏன்?
எனக்காச்ருஷ்டித்த இந்த ஸ்திரீரத்தினத்தைச் சிறப்பில்லாக்
குறக்குடியிற் பிறப்பித்ததுமன்றி பறக்குமினங்களையோட்டப்
பருதியின் கொடியகிரணங்கள் பரவிய இப்பாழும்வெய்யிலில்
பசியமிர்து சரீரம்பரிதபித்து கோவபரிபுரமணிந்த பாதாரவிந்
தங்கள் பரண்மேனின்று வருந்த பணிமலர்போன்றகரங்கள்
பற்பல முறையுங்கவணைவிச் சிவப்பப்பரிதாபமின்றியமைத்
தனனன்றோ?

இதற்காக அந்த நெஞ்சிரக்கமற்ற கஞ்சனைக்கண்டிப்பது
இம்முறையும் அவசியமே. (சினக்குறிதோன்றநின்று யோசித்
துத்தேறி) ஆனால்ஒன்று. இந்நங்கையர்க்கரசியை நங்கண்களி
க்கக்காணுமார்க்கஞ்செய்துதவியவர் நாரதர். அந்நாரதரோ
நான்முகனின் புதல்வர். ஆகலான், முன்னின்றுதவிபுரிந்த
முனிநாரதரின் முகத்திற்காக முளரியமலரவனைத்தண்டிக்காதி
ம்முறை மன்னித்தலே செய்நன்றியறிதலாகும். ஒருவேளை
பழையபகையைமுன்னிட்டு இப்பாவையை இம்சிக்கவெண்ணி
யிருப்பனோ? இல்லை இல்லை. அவ்விதமிருக்காது. பாலப்பரு
வத்திலேயே அவ்வணம் பாடுபடுத்திய அதே சுப்பிரமணிய
னே நாம்என்பதை அப்பிரமனிணையா திருக்கான்.

இவ்விதம் நாம் இவ்விடத்திலேயே நின்று ஆட்சேப சமா
தானங்களைக்கூறிப் பிதற்றிக்கொண்டிருப்பதிற் பிரயோஜன

மில்லே. மான் தேடிச்செல்வதுபோற்சென்று அவளிடம் வார்த்தையாடுவோம்.

(வெகுதூரத்திலிருந்து ஓடிவந்திளைத்தவர் போலிளைத்துப் பதட்டத்தோடு வள்ளியை நோக்கி)

இராகம்-நாட்டை. தாளம்-ஆதி.

பல்லவி.

இந்த மார்க்கமா யோர்மானு வந்ததா?

அநுபல்லவி.

மகா தந்திரத்தோடு வலேயினிற் சிக்கா
மற்கணத்து ளுப்பியென்றன் விற்கணைக்குந் தப்பியிந்த (மார்க்க)

சரணம்.

மங்காத திங்களி லங்குமு கங்கா ணு
மங்காயி ருங்கானெருங்கி யொதுங்கி யிந்த (மார்க்க)

வாயைத் திறந்துகுண நேயத்தமிழ் வீரண
தூயத்தமி ழுதிலன் பாயொத் துரைநீயிந்த (மார்க்க)

(பரபரப்புடன் நாலுபக்கமும் பார்த்து)

கலித்துறை.

தோலோல மிட்டேங்க வந்தோ னெடுத்த சொருபமென்ன
ஸ்ரீலோல நட்பரு முத்தருங் காணிற் றிகைத்துநிற்க
பாலோல யித்ததண் பாகோ வெனத்தான் பரணமர்ந்தே
ஆலோல மென்றிசை பெண்ணேமான் வந்ததோ அண்டியிங்கே

வள்—(சரேலெனப் பரணைவிட்டிறங்கி யச்சத்தோடு) சகிகாள் ஓடி வாருங்கள். ஓடி வாருங்கள்.

சகிகள்— (ஓடிவந்து) அம்மணி! என்னவிஷயம். என்னநேர்ந்தது!

வள்—வஞ்சியர் தனித்திருக்கும் இவிடத்திற்குக்கொஞ்சமுமஞ்சாநெஞ்சுடன்வந்தது யாரெனவிசாரித்துக்கேட்கும் விஷயத்திற்கு சீக்கிரமாகப் பதிலுரைத்தனுப்பிவிடுங்கள்.

(ஒருபக்கமாக ஒதுங்குகிருள்)

துவாத சாந்தப்பதிவை என்றவர்ணமெட்டு.

இராகம்—தேசிகம், தாளம்—ஆதி.

வேடன்— பல்லவி.

வலையின்மீறி வழியைமாறி மானொன்று வந்ததுண்டா (வலை)

அநுபல்லவி.

சிலையை வளைத்துச் சீர் கையிலேத்துத்
தேடி வந்தனன் நாடிவந்த வென் (வலை)

சரணம்.

மலையினேர் பற்றியும் வனமெலாஞ் சுற்றியும்
மறைந்ததைக் காண்கி லேனே
மங்களம் நன்குறும் பெண்களே எனக்கதை
வழுத்துவீ ரிங்கு தானே.

சகிகள்— பாட்டு.

வரும்போ மநேக மான்கள்
விரும்போ மதையே நாங்கள்
வா ளயிலணிந் தோரே அதற்கடை
யா ளமுளதோ நேரே புதர்க்கிடை

பல்லவி.

வலையின்மீறி வழியைமாறி வந்தமானைக்கா ணோம்யாம் (வ)

வேட.—பெண்களே! நான் தேடிவந்த மானுக்கு

இராகம்-பியாகு, தாளம்-ஆதி.

கண்ணி.

கண்டத்திற் குங்கீழி ரண்டுகோ டுண்டதைக்
கண்டவர் யாரும் மிரண் டிடுவார்
கண்டொத்த வாய்மொழிப் பெண்டீரதைப் பார்த்த
துண்டோ வெனக்கதை விண்டிடுவீர்.

சரி சரி! வெகு நன்று! ஓய் வேடுவரே நீர் கூறியபடியான மானை நாங்கள் பார்க்கவில்லை. அது இருக்குமிடத்தைத் தெரிந்து தேடுங்கள்.

வேட—ஆம் ஆம் நீங்கள் அறியமாட்டீர்கள்தான். ஏன்? நான் இவிடத்திற்கு வந்தபிறகுதானே நீங்களும் ஓடிவந்தீர்கள் இங்கே

ஆகவே அதற்கு முன்னால் இந்த இடத்தில் இருந்தவர்களைக் கேட்க வேண்டியதுதான் நியாயம். நீங்கள் உங்கள் வேலைக் குப் போகலாம் என்றால் தடையில்லை.

கலித்துறை.

வாடாத மாவனத் தேவந்து லாவுபொன் மானினியே
ஓடாத மான்மாரு டாடாத மான்வேறே ரோர்ந்தணுகக்
கூடாத மான்மாலை சூடாத மான்மார்பிற் கொண்டகொம்பு
கோடாத மானதுபெண் மான்வந்த துண்டோ? குலக்கொடியே.

வள்— கலித்துறை.

சொந்தமான் வந்தமான் இங்கே நுழைந்ததாய்ச் சொல்லுமுன்தன்
பந்தமான் வீட்டிற்பார் இந்தமான் கைக்குட் படாது நப்பி
தந்தமான் புத்திமான் நீயெனில் எம்பிதா தாக்கியுன்னை
அந்தமான் தீவுக் கனுப்புமுன் செல்வா யறிவிலியே.

இராகம்-கமாஸ். தாளம்-ஆதி.

கண்ணிகள்.

| | | | |
|---|---|---|---|
| வே— | மானொன்று வந்ததுண்டோ சொல் | | (மா) |
| வள்— | நானொன்றுங் காணே | னீ செல் | (நா) |
| வே— | வலை மீறிய | நிலை தேறிய | (மா) |
| வள்— | நவி மூடனே | மலை வேடனே | (நா) |
| வே— | மாவனமதி | லேயழகிய | |
| | ஜீவனமயி | லேயழகிய | (மா) |
| வள்— | நாவிணையிழப் | பாய்துனிமட | |
| | தீவினையிழைக் | காதினியட | (நா) |
| வே— | மார்க்கமுற்றிங் | காக்ரமித்து | |
| | யார்க்குளுஞ்சிக் | காக்ரமத்து | (மா) |
| வள்— | நாய்க்குலத்தைப் | போற்குரைத்து | |
| | நோக்கலற்க | மேற்குறித்து | (நா) |

வே— வந்தமா னிங்கேநு ழைந்திடக் கண்டேனே
வள்—அந்தமா னிங்கில்லை சிந்தைமு றண்டேனே
வே— வாதமேனோ தேடிவந்த மானைக்கண்டு கொண்டபின்
வள்—மாதநீவே னுன்னைத்தீய காதலாலே விண்டவன்

வே— மங்கையே உண்மைதான்
வள்— தங்கிடாய் வன்மை காண்

வ-ம்—வேடுவனே! உன் வலைக்கும் கணைக்குந் தப்பிவந்த நூதன அடையாளமுள்ள மான் இவிடத்துக்கு வரவில்லையென எனது சகிகளும் நானும் தெரிவித்ததைச் சிறிதும் செவிக் கொள்ளாது மீண்டு மீண்டும் ஏதேதோ பொருத்தமற்ற புன் மொழி கூறிப் பிதற்றுகிறாய் இது ஒழுங்கல்ல. "இங்கு மான் இல்லை" என்று கேட்டக்ஷணமே தவறியோடிய மானைக் காணப் பதறியோட வேண்டிய நீ பெரிதும் தாமதித்து வீண் வியவகாரம் பேசுவதைப் பார்த்தால் "உண்மையில் மானைத் தேடிவந்தவனல்ல" என்று நன்கு விளங்குகிறது. ஆதலால் நினது மனோரதத்தைத் திருப்பி மரியாதையாகச்சென்றுவிடு.

வே—பெண்ணாமுதே! நான் தேடி வந்தது பலமானல்ல. ஓரே ஒரு மான். அது பெருமான், திருமான், தருமான், இனமான், கனமான், இருதனமான், நறுவனமான். அத்தகைய உத்தம கோமான் மீது உனக்கு விருப்ப முண்டானால் உடையவர்க் குப் பிரதியுபகாரம் செய்தல்லவா அதை உரிமையாக்கிக் கொள்ளவேண்டும்.

வள்—அவ்விதம் எனக்கு அம்மான் மீது விருப்பமு மில்லை உன் மானை இன்ன மானெனவும் அறியேன்.

வே—கண்ணே! அதாவது இப்போது நான்

நொண்டிச்சிந்து.

காட்டில் வந்து பேட்டிகண்ட மான்—ரூபங்
காட்டி நின்று மேட்டிமையின் நாட்டிகங்கொள் மான்
நாட்டமைய லூட்டிவைத்த மான்—எங் .
நாட்டவரும் போற்றியேபா ராட்டத்தக்க மான்
வாட்டமற்றஸ் ரேட்டமிக்க மான்—கூர்
வாட்டன்மையைப் போட்டிசெயும் நீட்டவக்க மான்.
வேட்டவென்னைக் கூட்டிக்கொள்ளு மான்—நல்
வேட்டைமார்க்கப் பாட்டையதின் தேட்டமாகும் மான்
காட்டில் வந்து பேட்டி கண்டமான்.

ஓடி மெட்டு.

வள்— ஓடிவந்த வேடுவனே கேள் நீ
உரைக்குங்குறி மானையிங்கு வரக்கண்டிலோம்
மோடிகொண்ட லாடன்றனைப் போல் மிக
மோதிநின்று வாதுமொழி யோதிடாது போ (ஓடி)

அடே! உன் அறிவின்மையினால், கூறியதையே கூறிப் பித்தங் கொண்டவன்போற் பிதற்றுகின்றாய். பின்னும் அடா மொழிகளையும் உபயோகிக்கிறாய் இது உனக்குக் கெடுதியையே உண்டாக்கும். என் தமயன்மார் வரும் சமயமாயிற்று. நீ இனியும் இங்கு நின்றாயானால் உன்னுயிரைப் போக்கிவிடுவார்கள். அதற்கு முன்னாகச் சென்று தப்பிப் பிழைத்துக் கொள்.

வே—அதிருக்கட்டும் பெண்ணே! நீ எவனத்தின்போது கவனத்தைத் தினைப்புனத்தில் செலுத்தி பருவகாலத்தை நடுக் காட்டில் மலர்ந்த புஷ்பத்தைப் போற் பயனின்றிக் கழித்து வருவதைக் காண எனக்கு மிகுதியும் வருத்தத்தைக் கொடுக்கிறது. கண்ணே இது கவனிக்கத்தக்க விஷயம்.

வள்—அடா வெறிகொண்ட வேடா! என் விஷயத்துக்காக வழியிற் போகும் நீ வருத்தப்பட வேண்டிய பிரமேயம் யாது மிலது. உடனே அகன்றுவிடு.

காமசுந்தராங்கி யுனது என்ற மெட்டு.

இராகம்-தன்யாசி. தாளம்—ரூபகம்.

பல்லவி.

தாமதந்த காதிங் கெனது
தாபமோதி னேனடி மலரணை தனிலுறவினி (தா)

சரணங்கள்.

தட்டுக்கெட்டேன் ததியுன
திட்டப்பட்டுத் தொட்டணையவித் (தா)

தகுந்தமதி முகந்திகழ
வுகந்ததிக சுகந்தாவினமூர் (தா)

தத்தைக்கனி மொழிசொலிதிட
சித்தக்கனி வொடுதனிமருவிட (தா)

சகிக்கமுடி யாதினிமேல்
சரிப்படுவை கலக்குமத
சரப்படையை விலக்கியுதவிட (தா)

அநுபல்லவி.

க்ஷேமகந்த மேமணந்த
செழுந்தனமே லெழுந்தவெனை
வெழுந்தநினை வொழிந்தினிமைபெற (தா)

சரணம்.

கொண்டலொத்த குந்தளச் செந்தேனே
கோகுலவீரனைக் கோனுரை மானே
கண்டமுதல்மெத்த காத லுற் றேனே
கடல்வளைபுவி யிடையிருவரு
முடனுயிர்நிகர்த் தடைவுடனுய ததி (தா)

வள்:— அப்பா நட்பாய் என்ற வர்ண மெட்டு.

இராகம்—அடாணு. தாளம்—ஆதி.

பல்லவி.

மூடா போடா முன்னுல்நில் லாம லோடி (மூடா)

பீடா மோடா பெண்ணெடு வாத மோத
பேயா நாயா இது பின்பு துன்பு (மூடா)

சரணம்.

காடாந் தினைக் காவில் வந்து
ஏடா கூட மேமி குந்து
கேடாம் வார்த்தை மொ ழிந்து
கிட்டி மிரட்டி யிங்கொட்டி யே
கெஞ்சு வஞ்ச (மூடா)

---

மீனலோசனி பிரஸ், மதுரை:—31.

கடவுள் துணை.

சங்கீத ரத்தின

S. V. சுப்பையா பாகவதர்

K. S. செல்லப்பா ஐயர் K. S. அனந்தநாராயண ஐயர்

கண்ணிய நடிகர் திரு. K. P. காமாக்ஷி

சபாரஞ்சித R. V. சத்திவேல் ஆச்சாரியார்

K. B. சுந்தராம்பாள் P. S. இரத்னுபாய்,

சங்கீத பாலகிருஷ்ணகான சபையார்

இவர்கள் ஆடிவருகிற

சிங்கார நவீனகான

# ஸ்ரீவள்ளி திருமணம்.

இரண்டாம் பாகம்.

(வேடன் வள்ளியை நோக்கி)

பூங்கா விநோதமே என்ற வர்ணமெட்டு.

இராகம்-ஹரிகாம்போதி—தாளம்-ஆதி.

பல்லவி.

ஜோதிச் சிங்காரியே சொல்லவொண்ணு வலங்காரியே (ஜோ)

சரணங்கள்.

சொந்தம் சந்தம் பரிமள
கந்தம் பந்தம் பெறுமிள (ஜோ)

சுத்திக்கும் புத்திக்கும் படியதனி
லெத்திக்கும் நத்திக்கும் பிடுவர்தனி (ஜோ)

சோபிக்கு மேதக்க ராணிக்கண் ணேமெய்க்க
ரூபிக்க வேதக்க மாணிக்க மேமிக்க (ஜோ)

சொன்னமயப் பொன்னுலகுய் யமரர்களும்
இந்நிலம் வாழ் மன்னர்களும் பிரமை கொளும் (ஜோ)

சுகிர்தப்புரவல சவுரிய மிகுசுக
சகிதப்பிரபல பவுரிஷ நிகழ்ஜெக (ஜோ)

சுரத நூலே கருது மாலே
சரத லீலே பொருது வேலே (ஜோ)

சுபாமிர்த ஸ்ரீ பாலகிருஷ்ணகான
சபா முறைமை கொள் தேவ லக்ஷணமான (ஜோ,

அநுபல்லவி.

பாதிச்சந் திரனிணே யுறுநுதல்
பக்குவ விற்பன சற்குல வுற்பன (ஜோ)

சரணம்.

ஏதிக்ஷ ணம்பொறுக்கேன் என்கடத்தங்கசன் கொங்கலர்ப்பாணமே
ஏவுகின் றுனதனே யிங்குவிலக்கிட நன்கு கல்யாணமே
சாதிச்சந்தானநற்பத்மினித் தங்கமே புரிந்திட மங்கள வோணமே
தானின்று நக்ஷத்திரமும் சங்கையை விடுவிடு மங்கை யுணுணமே
சந்தத முந்தன பந்திலி சைந்துற வாடி கலந்தணேந்து
சந்ததி மைந்தர் பிறந்து வளர்ந்தக நீடி குலந்தழைந்து
செந்தமி ழுந்தமி குந்துறை சிந்துகள் பாடி நலந்திருந்து
சிந்தையு வந்திட வந்தன னுந்தனே நாடி
தித்தித்திடும் மொழிக்கவிச் சிங்கம்
திக் கெட்டிலும் புகழ் பகி ரங்கம்
வித்வத் பகதூர் எனுமுயர் துங்கம்
வீரணக் கோவல ஞர் பிரசங்க (ஜோ)

வசனம்—காதற் கனியே!
வள்ளி—சீச்சீ

என்ன கேள்வி முறை என்ற வர்ணமெட்டு.

இராகம்-பிலகரி—தாளம்-ரூபகம்.

பல்லவி.

மூட வேடுவனே என்
முன்னே நின்றிடேல் சொன்னே னித்ததியே மட (மூ)

அநுபல்லவி.

வடா கூடமே ேனடா நீ வெளி
போடா போ கொடுமட (மூ)

சரணம்.

கேடுகால முன்னைக் கிட்டியதா லிந்த
கெட்ட செயலுக்குட் பட்டாயடா சொந்த
பீடுறு நற்குல பேரைக் கெடுக்க வந்த
பேயே துற்குண நாயே அக்ரம வாயே னடகொடுமட (மூ)

வசனம்—மான் தேடிவந்ததாக மாரீசம் செய்து வஞ்சிக்க எண்ணங் கொண்ட மகாத்ரோகியே! உன் எண்ணம் பலிக்காது மரியாதையாக அகன்றுவிடு.

வே-வ-ம்—அடி என் கண்ணிற் கருமணியாகிய கட்டாணி முத்தே நான் வஞ்சிக்க வந்தவன் அன்று. உன்னைக் கொஞ்சிக் கனிந் தணைந்து ரஞ்சிக்க வந்த நாயகன் என்றுநீ உறுதியாகக்கருதி உதவி புரியவேண்டும் ஒண்டொடியே!

வ-வ-ம்—அடே மானங்கெட்ட மதியிலியே! உன்போன்ற வெட்க மற்ற வீணனை நான் இதுகாறுங் கண்டதேயில்லை சீ செல்லு வாயப்புறம்.

வே-வ-ம்—ஆசைக்களஞ்சியமே, உன் விஷயத்தில் என் வெட்கமெல் லாம் பாலோடு சேர்ந்த நீரும் பாலாவதுபோல் காதலுடன் கலந்து காதலாகி உன்னையடையக் காத்து நிற்கிறது கருணை செய்.

கதனகுதூகலராகப்ரீயே என்ற மெட்டு.

இராகம்-கதனகுதூகலம்—தாளம்-ஆதி.

பல்லவி.

வனிதாமணி வனவேட ராணி
வந்தனந் தந்தேனீ வந்தணை கல்யாணி (வ)

அநுபல்லவி.

இனிதாமினி எனையே கண்காணி
இங்கிதந்துலங்கு மங்க ளங்கொள் வாணி (வ)

சரணம்.

மந்தமானதென்ற லுந்தி வீசுகின்ற
இந்த வேளையென்ற னந்தரங்கமொன்ற
சொந்தமாகவே சிந்தையாவல் நீடும்
சுய பாரி நேய மியை போடு கூடும்—சுப
சோபன மேபண வாபணி வாய் பிரஸ்
தாபன ஜீவன பவுரிஷமுற ஜெய
தோரண மேவிய வீரண காவிய
துதி பரிமணவர நிதிபெறு குணகர (வனி)

வசனம்—இன்ப மணியே! நினது உருவத்திற்கும் பருவத்திற்கும் இத்தினைப்புனத்தில் தனித்திருப்பது ஒத்ததாகாது ஆதலால் என்னோடு வந்து கண்ணியமான காமசுகந்தருவாய் காமினியே.

வள்— கலித்துறை.

மண்டால மீதி லுனைப்போல் மரியாதை மானமற்ற
சண்டாள ருண்டென்றுங் கேட்டிலேன் தீய சனியனுன்னைக்
கண்டாலுந் தோஷந் தொடர்ந்திடு மாதலாற் கன்னியென்னை
யண்டாது செல்லுவாயின்றே லிழப்பாயுன் னுருயிரே

வ-ம்—அடே இனி க்ஷணப்போதேனுந் தாமதிப்பாயாகில் உன்னுயிரை யிழக்க நேரிடும் மரியாதையாகச் சென்றுவிடு.

வே-வ-ம்—பெண்ணே! உண்மை. இனி அரைக்கணமேனும் ஆலசியம் செய்தால் அந்த அங்கஜ னம்பால் அங்கம் புண்ணாகி என் ஆவியை யிழப்பது நிச்சயந்தான்.

மதுரகான சரசராணி என்ற வர்ணமெட்டு.
இராகம்-அடாணா—தாளம்-ஆதி.

பல்லவி.

மதியை நேரும் வதனக்ரீடி
மதனவாதைக் குதவ வாடி

அநுபல்லவி.

ததியில் நேரிங் குணைக் கொண்டாடி
சரணம் புரிந்தேன் தருணங் கோடி

சரசர்க் கிரமணியே அரசர்க்கருமணியே
விரசர்க்குறுமணியே தரசொற்கற மணியே

சததளவிக சிதமலரணே
தனிலெணேரதிக் கனிநிகர்த்தணே
இததுணேச்சுக சிதவிதரணே
இரவும் பகலும் புரிவேன் ஸ்மரணே

இன்பம் பொங்குங்கிளே செம்பொன் கும்பங்களே
என்பங்கென்றிங்கருள் துன்பங்குன்றும் பொருள்

இதயகரண மினிப்பப் பேசி
யுதய கிரணமெனப்ர காசித்

திந்தத்தா னம்பெற்ருய் சந்தித்தே னண்பொற்ருய்
ஏன்ற மிருது வாக்கி வீரணக்
கோன்றமிழினே நோக்கு தாரண
இசையுணர் புவி மிசையனுபவி
யீங்ககலா தோங்குகலா (மதியை)

வசனம்—இனத்தினே இனமே சாருமென்றபடி நானுன்னேப்பெரிதுங் கருதி நிற்கிறேன் ஆதலால் நின் பொன் போன்ற வாய் திறந்து அன்பான இன்பமொழி யருளுவாயாக. கோமளக் குயிலே.

வள்-வ-ம்—அடே! என்னதான் எடுத்தோதியும் சொன்னதையே சொல்லி நிற்கும் துன்மார்க்கத்ரோகியே! இனி உன்னேடு வார்த்தையாடுவதே இல்லே நீ எவ்வாருயினும் சரி.

கொஞ்சஞ் சஞ்சலமா என்ற வர்ணமெட்டு.

இராகம்-பைரவி—தாளம்-ரூபகம்.

பல்லவி.

கொஞ்சுங் கிஞ்சுகமே இங்கு
கொஞ்சந் தயவு செய் தஞ்சந் தஞ்சந் ததியிது (கொ)
கொண்டாடுவே னென்றுங் கண்டானந்தங்கொண்டு (கொ)
கோகில மேமயி லேமய லாகிரி யால்மன நோமுனங் (கொ)

கூறும் பொடுமதன் விடு சரமதை
யேறும்படி யுத விடு சாதமுங் (கொ)

குளிர் மாமதி நிகராகவே
யொளிர் மாசறு முகியே கவின் (கொ)

கொக்கோகமெனு நூலினிற் கூறிய
பக்குவ நவ லீலையிற்றேறியே (கொ)

கொத்து முத்தை வைத்திழைத்த
நத்தொடொத் திணைத்து முத்தங் (கொ)

கோபமுற்றி டாதணைத்து
தாபமுற்று மே தவிர்த்து (கொ)

கோவைக்கனி யதரவமுதையுணுந்
தேவைக்கனு சரணையெனவே தினங் (கொ)

கூடிக் கை கோர்த்திரு வருநித்தம்
வேடிக்கை யாய்த் தழுவியே முத்தங் (கொ)

அநுபல்லவி.

கஞ்சமலரவன் கைத்திறங் காட்டவே
கருதியுன்றிரு வுரு வாக்கிய
துறுதி யென் றறிய சிலாக்கிய
காரண மோது சு பாகர
வீரண கீத ம னோகர
காமினியே கனதனமுற
நாமினியே அனவரதமுங்
கலந்து பரிந்து கனிவாய்
மலர்ந்து சிறந்து இனிவாய் (கொ)

சரணம்.

மஞ்சிணை குந்தள மாதர சாணியே
மங்கள கங்கணச் செங்கைக் கல்யாணியே
விஞ்சை யெனுந்தமிழ் வித்வ யாழ்ப் பாணியே
வேண்டி நின்றேனெனை யாண்டருள்பேணியே
விற்பன வஞ்சியே சொற்படி
சப்பிர மஞ்சம திற்படி
மெத்தைதனிற் சய னித்தொரு
மித்தித லச்சிய மித்துரு
மேவ மோக பாக யோக
தேவ ரக ரீக மாக (கொ)

வே-வ-ம்-இன்சொற் கிஞ்சுகமே! என்னைப் பேசும் தூஷண மொழிக ளனைத்தையும்பூஷணமாகவேஏற்றுக்கொள்வேனன்றி யோசனை வேறேதும் செய்யேன். எத்தகைய பிரீதி இருந்தாலும் ஸ்திரீகள் முதலில் சரிசொல்ல நாணுவார்கள் என்பது தெரிந்த விஷயந் தான் ஆதலால் நானே உன் அருகில் வருகிறேன் எங்கே ஒரு முத்தங் கொடு. (சமீபத்தில் நெருங்குகிறார்.)

வள்-வ-ம்—(பதறி) அடா பாதகா! இதோ பார் என் தந்தையை யழைக்கிறேன் (உரத்த சப்தமாய்) ஆ! தந்தாய் சகோதரர்காள்!

(வள்ளியின் கூக்குரலைக்கேட்டு வேட்டைக்கு வந்திருந்த நம்பிராஜன் புதல்வருடன் ஓடி வரவும் உடனே வேடனாகிய சுப்பிரமணியர் ஓர் வேங்கைமர மாகிறார்.)

கட்டழகியே மனங் கலங்காதே என்ற வர்ணமெட்டு.

இராகம்-தேசிகம்—தாளம்-ஆதி.

பல்லவி.

வந்தோம் வந்தோம் அஞ்சிடேல் வள்ளியே அழைத்த
வாறென்ன கூறுவாய் நன் றுள்ளியே

அநுபல்லவி.

இந்த நற்காவி லிருந்தெமைக் கூவி
யேனோ விளித்தாயதற் குடன் மேவி னேமுன்
இன்னலதனைச் சொல்வா யிங்க வாவி (வந்தோ)

நம்பிராஜன் வசனம்—என் செல்வமாகிய வள்ளித்தாயே. எங்களை யழைத்த காரணம் என்ன யாது தீங்கு சம்பவித்தது உனக்கு சொல் சீக்கிரம்.

வள்-வ-ம்—அப்பா! அப்படி தீங்கொன்றுமில்லை. பறவைகளைத் துரத்திவிட்டுப் பரண் மீது சற்று சயனித்தயர்ந்து விட்டேன் அதுபோது அஞ்சத்தக்க ஓர் கனவு கண்டு பயந்து ஓலமிட்டி ருக்கிறேனன்றிவேறல்ல தந்தாய்!

சகோதரர்—ஆகா அப்படியா சரி நாங்கள் சென்று வருகிறோம். (திரும்பி) இதேது இந்த வேங்கைமரம் புதிதாக இருக்கிறது.

நம்—ஆம் இம்மரம் இதற்கு முன் இவிடத்திற் கிடையாதே!

சகோ-ஒருவன்—அவ்விதமானால் இம்மரத்தை இப்பொழுதே வெட்டி விடுகிறேன் (வாளை யோங்குகிறான்.)

வள்ளி—(தடுத்து) அண்ணா வெட்டவேண்டாம். இத்தருவினால் நமக்குக் கெடுதியொன்றுமில்லையே. குளிர்ந்த நிழல் கொடுத்து நலன் தானே செய்கிறது.

நம்பி—வத்ஸா! அதை வெட்டாதே. தங்கை கூறுவது சரிதான் (திரும்பி) அம்மா! இன்னுங் கொஞ்சவேளையில் கதிரை யறுத்துக் கொண்டு உன்னை ஊருக்கழைத்துக்கொள்ளுகிறேன் வேட்டை மார்க்கத்தில் உன் குரல் கேட்டோடி வந்தோம். சென்று வருகிறோம் விடை கொடு கண்ணே!

வள்-வ-ம்—அவ்விதமே நமஸ்காரம் பிதா சென்று வாருங்கள்.

(நம்பிராஜன் புத்ரருடன் செல்லுகிறான். சுப்பிரமணியர் மரவுரு நீங்கி மறுபடியும் வேட வேடத்தோடு வந்து வள்ளியை நோக்கி)

தேடி வந்தேனே வள்ளி மானே என்ற மெட்டு.

இராகம்-பைரவி—தாளம்-ஆதி.

பல்லவி.

ஓடி வந்தேனே மீண்டும் நானே

அநுபல்லவி.

மோடி செய்யாதே சேர வேண்டும் மானே (ஓ)

மகுடம்.

ஊன மான உரையெனைப் புரியினும்
ஞான மான முறையெனக் கருதியிதோ (ஓ)
உற்பவ லக்கண தேனே சத்தியம்
தற்பொழு தறைகுவேன் மாநேசத்துடனே (ஓ)
உத்தம சந்த்ரவி சித்திர மலர்முக
பத்மினி யுன்தனை நத்தி மகிழ்ந்திடவே (ஓ)

சரணம்.

நாடியே கெஞ்சி னேனே
நாரியே வஞ்ச மேனே
ராசி யோங்க விசைநய வீரண
பாஷ்ய தீங்க விசொலியி விரைவுடனே (ஓ)

வ-ம்—கண்ணே!

வள்-வ-ம்—இதென்ன! சனியொழிந்ததென்றல்லவோ நினைந்தேன் தந்தை தமயர் செல்லும் வரை எங்கோ மறைந்திருந்துவிட்டு மீண்டும் வந்து தொடர்ந்து கொண்டதே இனி இவனைப் புனத்தை விட்டே விரட்டவேண்டும்.

வே-வ-ம்—மின்னே என்ன யோசிக்கிறாய்! அந்த கன்மனங்கொண்ட மன்மதனானவன் கொன்மலர்ப் பாணங்களை பன்முறை யேவி என் மனநோக வன்மிடிசெய்யும் இம்சையைச் சகிக்கவாற்றாது மீண்டும் நின் முனமண்மிக் கெஞ்சியிறைஞ்சுகிறேன் ஆதலால் என்னை,

தயவிலாததேன வஞ்சம் என்ற வர்ணமெட்டு.

இராகம்-சுருட்டி—தாளம்-ஆதி.

பல்லவி.

மருவக்கால மிதே வருவாய் எழில்
மாதே குமுததிருவாய் முத்தந்தருவாய் (மரு)

அநுபல்லவி.

பருவ லீலை பல புரிவாய் நல
பவுரிஷத்திடக் கவுரவத்துடன்
பகர்ந்தன னுகந்தெனை யிதுததி (மரு)

சரணம்.

காதலா யுனையண்டிக் கலங்கினன் வாது
கழறுவது கருணை யழகுக் கொவ்வாது
ஆதலாற் புனுகு ஜவ்வாது புனைந்
தன்பிசைந்ததி இன்ப சந்ததி
யதுகிளை யோங்கிட வீரண
முதுமொழி மாங்கல்யதாரண (மரு)

வள்— ஷை மெட்டு.

பல்லவி.

சருவமூடமடத் தடியா நின்
சாகசங்கள் முடியா தடகொடிய (சரு)

அநுபல்லவி.

உருவமாக்கியவப் பிரமா உயிர்க்
குரிய சிர்த்திகொள் அறிவைமாத்திரம்
உனக்கமைக் கவில்லையோ
மனக்கமைக் கவினறு (சரு)

சரணம்

காதக வினைகொண்ட கபடத்துன் மார்க்கா
கண்டபடி யுழறும் கருவத்தின் மூர்க்கா
சாதக வினையிது ஏற்கா தடா
சந்தித் திங்கனம் வந்தித்தென் முனம்
சனியன்போல் நேரினில் வருகேல்
கனியன்ப வீரணவுரை கேள் (சரு)

வ-ம்—அடே கல்வி யறிவென்பதே சிறிது மில்லாக் கயவனே! நீ சரியான ஆண் பிள்ளையாயிருந்தால் என் தந்தை தமயர் வந்தபோது எதிரில் நின்றிருக்கலாமல்லவா? அப்படியில்லாமல் இந்நேர பரியந்தம் எங்கேயோ ஒளிந்திருந்துவிட்டு இப்போது அவர்கள்போகவும் வந்து வாதாடுகிறாய் மான ஈன வெட்க ரோசமென்பது கிஞ்சிற்றுமற்ற மடையனே! இன்னும் தாமதிப்பாயானல் மறுபடியும் என் தந்தையை அழைத்து உன் உயிரைப்போக்கும்படி செய்வேன் மரியாதையாக உயிர்பிழைத்தோடிப்போ.

வே-வ-ம்—அடி! எனது அருமை பெருமை யறியாத சிறுமியான வள்ளியே! எவ்விதத்தும் உன்னை மணப்பேன் என்பதை உனக்கு உறுதியாகச் செல்லுகிறேன் இது நிச்சயம்

வள்-வ-ம்—சரி சரி புனத்தைவிட்டுப் போ சீக்கிரம். (போகிறான்)

வே-வ-ம்—(தனிமையில்) இவ்வளவு நேரமாக எவ்வளவோ முயற்சி செய்தும் இணங்காமல் சென்றுவிட்டாள். ஆதலால் இவ்வுருவத்தை நீக்கி வேட்டை மார்க்கத்தில் இவள் தந்தையைச் சந்தித்து காரியத்தைப் பூர்த்தியாக்கவேண்டுமே தவிர வேறு வழியில்லை இப்போதே கிழப்பண்டாரம்போல் நம்பிராஜனைநாடிச் செல்கிறேன்.

## தினைப்புன சமீப வனம்.

(சுப்ரமணியர் விருத்தச் சந்யாசிபோல் நம்பிராஜன் எதிரே வருகிறார்.)

நந்தவனத்திலோ ராண்டி என்ற மெட்டு.

ஆனந்தக் களிப்பு.

சம்போ சதாசிவ நாதா திவ்ய
சம்ப்ரமப் பார்வதி இன்பச மேதா
அம்போ ருக நேரும் பாதா என்னை
ஆண்டருள்வாய்த் தில்லைத் தாண்டவ நீதா (சம்போ)

நம்பிராஜன்—(ஆவலோடு முன் சென்று) ஸ்வாமி நமஸ்காரம்!

கிழவர்—ஆசீர்வாதம். பரமன் உன்னைப் பாராமரிப்பாராக.

நம்-வ-ம்—ஸ்வாமி! தாங்கள் இவ்வித வயோதிக திசையில் இந்த ஆரண்யத்தில் ஒன்றியாக தள்ளாடிக்கொண்டு வரவேண்டிய காரணமென்ன? தங்களுடைய வாசஸ்தானம் எது? என்பவைகளை எனக்குத் தெரிவிக்கவேண்டுகிறேன்.

கிழ— கன்யா குமரிதனைத் தேடி வந்து
கால்நடையாக நடந்து திண் டாடி
சன்யாசி யான் இங்கு நாடி வழி
தவறிப் பசியினால் கவல்கிறேன் வாடி (கன்)

கிழ—அப்பா! நான் இருப்பது கமுகாசலம். காசி யாத்திரை செய்துவிட்டு, குமரி தீர்த்தமாடவேண்டி வரும்போது பாதை மாறி வந்து பாதையடைகிறேன் முதிர்ந்த பருவமானதால் பசி தாகம் சகிக்கச் சக்தியின்றி மயங்குகிறேன் இதற்குமேல் நடக்கவு முடியவில்லை.

நம்—பாவம்! சரி என்னோடு வாருங்கள் தாங்கள் பசி தாகந் தணிக்கலாம்.

கிழ—அப்பனே! இன்னுமா என்னை நடக்கச் சொல்கிறாய்.

நம்—ஸ்வாமி! அதிக தூரமில்லை இதோ சிறிது தூரத்தில் தினைப் புனக் காவல்செய்யும் என் புதல்வியாகிய வள்ளியிடத்தில் தங்களைக் கொண்டுபோய்ச் சேர்க்கிறேன் அங்கு தாங்கள் பசியாறலாம் வாருங்கள்.

கிழ—அப்படியே வருகிறேன். (யாவரும் போகிறார்கள்)

## தினைப்புனம்.

(கிழவன், நம்பிராஜன், புதல்வர்கள்)

நம்-வ-ம்—(வள்ளியைப்பார்த்து) அம்மா! இப்பெரியவருக்கு மிக்க பசியாக இருக்கிறதாம் இவருக்கு உணவு கொடுத் துபசரித்து உனக்கு உற்ற துணையாக வைத்துக்கொள் (கிழவனை நோக்கி) ஸ்வாமி தங்கள் மனம்போல் உணவருந்திச் சுகமாக இருங்கள் நாங்கள் சென்று வருகிறோம்.

வள்-கிழ-வ-ம்—அவ்விதமே. (நம்பியும் புதல்வரும் செல்கின்றனர்)

கிழ—மாதேவா! சம்போ கந்தா

வள்—(கிழவனைப்பார்த்து) ஐயா பெரியவரே இப்படி உட்காருங்கள் தாங்கள் எந்த ஊர் எங்கு செல்லுகிறீர்கள்.

கிழ—பெண்ணே! அதெல்லாம் பின்பு சொல்லுகிறேன் இப்பொழுது நானே.

### சிந்து வர்ணம்.

கண்ணிகள்.

பசியாலுடல் களைப்பாய் வந்தேன்
ருசியா யுணவளிப்பாய் இந்தப்
பக்கத்தெல்லா மேயலைந்து மிக்கத் தொல்லையாயுலைந்து (ப)

வள்— சசி பூஷணன் தாளே எண்த
பசியே இது வேளை நான்
தந்திட அன்னமில்லை மற் றெந்த வுணவுகொள்கிறீர் (ச)

கிழ—ஒரு பிடி தந்தாலும் போதும் சொன்ன
படியே நானெப்போதும் அடி
பேத்தியே நீ வாழ்கவென வாழ்த்திடவே பூமீதன (பி)

வள்— வடி தேனிலிங் கிசைந்து தினை
இடி மாவினைப் பிசைந்து தின்னும்
வண்ணந்தருவே னீர்மெல்ல ;உண்ணுந் தயவாக நல்ல (வ)

(வள்ளி தேனுந் தினைமாவுங் கொடுக்க வாங்கியுண்ட கிழவன் விக்கிக்கொண்டதாய் பாசாங்கு செய்துகொண்டு)

ஆருக்கோவந்த விருந் தேன்ற மெட்டு.

இராகம்-அடாணு—தாளம்-ஆதி.

கண்ணிகள்.

கிழ—சாதங்கேட்டதற்கிங் கேதோ கொடுத்தென்னைச்
சாகச்செய்தாயோடி வள்ளி — ஆகா

வள்—சாமியே நானொரு தீமையுஞ் செய்திலேன்
சங்கதியென்னவோ சொல்வீர்

கிழ—நெஞ்சை யொடுக்கியே சஞ்சல மிஞ்சலால்
நீகிட்டவாடி யென் வள்ளி — இந்த

வள்—நேரிழை வந்தென்ன பாரமோதாங்கிட
நேர்ந்ததை யாதெனச் சொல்வீர்

கிழ—தொண்டையிலே விக்கிக் கொண்டதனுல் கொஞ்சஞ்
சுத்தஜலந்தாடி வள்ளி — இதோ

வள்—தோன்றுஞ் சுனையினில் வேண்டிய நீருண்டு
சோகந்தனைத் தீர்த்துக் கொள்வீர்

நீர்ச்சுனை.

வள்—ஐயா! இந்த மடுவின் கரையிலேயே நின்று தண்ணீரருந்துங்கள்.

கிழ—சரி அப்படியே செய்கிறேன் (குடிக்கையில் தவறி விழுந்து கொண்டு) அடீ வள்ளி விழுந்து விட்டேனே ஐயோ ஐயோ.

இராகம்-கானடா-தாளம்—ஆதி.

கண்ணிகள்.

அந்தோ யிதென்ன மோசம் ஆமோவிப்பரி காசம்
இந்த மடுவிலென்னை யேனோ தள்ளினையடி.

வள்—உம்மை நானோ வீழ்த்தினேன் உண்மையில் லாக்கிழவா
இம்மை மறுமையினும் கன்மம் விலகிடுமோ

கிழ—என்னை மடுவில் தள்ளி எட்டியே நிற்கின்றாயே
இன்னுமோர் நாழிகையி லேகுமென் னுவியையோ

வள்—எட்டி நிற்காமலிங்கே யேது நான் செய்வதையா
தொட்டணைத் துன்னைவெளித் தூக்க வென்னாலாகுமோ

கிழ—ஒரு கையை நீ நீட்டிடில் உன் றன்கையைப் பிடித்து
வருகுவேன் கரை மேலே வள்ளி யென்னுங் கிளியே

வள்—காத்தை நீட்டினேன் பற்றிக் கால் சறுக்காமலேறி
விருத்தரே வாருங் கரை மீதினிலே நீர் தேறி

(வள்ளியை கிழவன் பிடித்து ஏறி)

கிழ—ஆகா! இந்த விதத்தில் தாகந் தீர்ந்தது.ஏ தையலர்க்கரசியாகிய மெய்யலங்கிர்த வள்ளி நாயகமே. எங்கே. என் அருகில் வா. மின்னே உன்னைப் பார்க்கப் பார்க்க என் மனதில் ஒருவித பற்றுதல் ஏற்படுகிறது ஆதலால்

இராகம்-அடாணா-தாளம்—ரூபகம்.

கண்ணிகள்.

தாகந் தீர்த்ததுபோல் மோகந்தனையு மித்
தருணந் தீர்த்திடுவாய் வள்ளி—இங்கு

வள்— தாறுமாறாகப் பிதற்றின லுந்தனின்
தாடி பறி கொடுப் பாயே.

கிழ— தாடி பறித்திடு தற் கோவே றுளுண்டு
தையலே நீ முத்தந் தாடி இந்தச்

வள்— சங்கதி முன்பே தெரிந்திருந் தானுன்னைத்
தாங்கிப் பிடித்திருக் கேனே.

வள்—அடே. சறுக்கி விழுந்தால் சாகும் படு கிழட்டுப் பிணமே! நீ கெட்ட கேட்டிற்குப் பெண்டாட்டி யொன்றும் வேண்டுமோ

வந்த வேளையிது நல்ல வேளை என்ற மெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-பியாக்-தாளம்—ஆதி.

கண்ணிகள்.

நாணற்பூப் போலே நரைத்த வுனக்கிந்த
நாளிற் பெண்டாட்டியும் வேணுமோடா
கோணற் புறமுது கோடு கொக்கிருமல்
கொண்ட கிழவனுக் கிதேதார் கேடா

கிழ—கேடா வென்றெந்தனைக் கேட்குஞ் சிங்காரியே
கிட்டியொரு முத்த மிட்டிடுவாய்
கூடாவிடிலென தாவி போகுமென்னைக்
கொன்ற பாவத்திற்குட் பட்டிடுவாய்

வள்— பாபம் பழியென்று பேசிப் பசப்பிடும்
பாசாங்கெல்லாமிங்கு செல்லாதடா
கோபம் பிறந்தாலித்தோழி யாற் பூசை
கொடுக்கச் செய்வேனென் முன் நில்லாதடா

கிழ— நில்லாதடா வென்று சொல்லிடும் வள்ளியே
நீ யென்னோடு வந்தால் நில்லே னிங்கே
அல்லா துன்னைவிட்டு நான் மட்டுமொன்றியாய்
ஆரணங்கே நோக்கிச் செல்வதெங்கே.

கந்தா காருண்யனே என்ற வர்ணமெட்டு.

பாட்டு.

மானே மாமயிலே மனமோ கினியே
தேனே சீர்குயிலே எனைச் சேர் கனியே

தொகையரா.

மார வேள்புரி கோர வாதையை
மாற்றுவாய் எனைத் தேற்றுவாய்
ஆரவார கெம் பீரனென துயர்
ஆற்றுவாய் பதில் சாற்றுவாய்

பாட்டு.

ஆனேன் ஆசையுன் மேல் அணையாரணங்கே
நானே நேசன்மென் மேல் நணி நேரிணங்கே

தொகையரா.

ஞானமோனருந் யானமே செயும்
நாச்சியே நீ கடாட்சியே
கான வீரனக் கோனுதாரணக்
காட்சியே தமிழ் மாட்சியே

பாட்டு.

கண்ணே காமினியே கருணா மிர்தமே
பெண்ணே நாமினியே பெறுவே மிதமே (மா)

வள்-வம்—அடா பாழுங் கிழவா! வர வர மாமியார் கழுதை போலா னாளாம். என்றபடியாகி விட்டாயே. சீ இனிமேல் இங்கு நில்லாதே. சென்றுவிடு. இன்றேல் சீரழிவாய்.

கிழ-வ-ம்—வள்ளிநாயகி! உன்னைச் சோதித்தேனேயன்றி வீடு போ போ காடு வாவா வென்னும் திண்டாட்டமான இந்தவயோதிகக் காலத்தில் எனக்கு பெண்டாட்டி என்ன வேண்டியிருக்கிறது இது தெரியாமல் நீ நிஜமாகவே நினைத்துப் பலமாய்க் கலவரப் பட்டு விட்டாயே. ஆனாலும் பாதகமில்லை. இப்படி வா என் அருகில் உட்கார்ந்து உன் கையை நீட்டு ரேகை பார்த்துக் குறி சொல்லுகிறேன்.

வள்—தாத்தா! மன்னிக்கவேணும் (வணங்கி யுட்கார்ந்து கையை நீட்டி) அப்படியானால் பார்த்துச் சொல்லுங்கள்.

கிழ— ஆனந்தக் களிப்பு.

உற்றுக்கேட்பாய் வள்ளி மாதே மிகு
யூகமாய்ச் சொல்வேன்கை ரேகையிப் போதே
பற்றுக் கோடான நற்சேதி இதிற்
பலித்திட வேண்டுமென் கலைத்திறக் யாதி
தேறுதலை ஸ்வர்யப் பீடு நிலை
திகழுஞ் சிலாக்கியப் புகழதினோடு
ஆறுதலை கொள் திண் டோளன் வெற்றி
யான வேலாயுத னேநின் மணாளன் (உற்று)

வசனம்—"நான் உனக்கு மாப்பிள்ளை" பார்த்துச்சொல்லிவிட்டேன்

வள்—போங்கள்; தாத்தா நீங்களா எனக்கு மாப்பிள்ளை

கிழ—அடி பயித்தியக்காரி. நான் உனக்கு மாப்பிள்ளை பார்த்ததாகச் சொன்னேன்.

வள்—சரிசரி போதுந் தாத்தா உங்கள் ஜோதிடம்

கிழ—பெண்ணே! நீ இந்த வனத்தில் எப்படி கொடிய மிருகங்களுக்குப் பயப்படாமலிருக்கிறாய்?

வள்—நாங்கள் மிருகங்களை யெல்லாம் பிடித்து விளையாடுவோமே.

கிழ—பேஷ் நல்ல மாதிரி! அப்படியானால் யானையைப் பிடித்து என்ன விளையாட்டு விளையாடுவாய்

வள்—ஐயோ! ஐயோ!! அதை மட்டும் சொல்லாதீர்கள் அதன் பேரைச் சொன்னாலே என் மெய் நடுங்கும்.

கிழ—(தனியே) சரிசரி இப்பொழுது தான் அகப்பட்டாள் (திரும்பி வள்ளி சற்று விலகிக்கொள் நான் பூஜை முடிக்கவேண்டும் (விலகவும்) எனது தமயனாகிய விநாயகரை யானைபோல் வரும்படி பிரார்த்திக்கிறேன்.

அம்பிகா உன் மகன் குகன் என்ற மெட்டு.

இராகம்-சிந்துபைரவி-தாளம்—சாப்பு.

பல்லவி.

யானை போல் வாருஞ் சோதரா
ஞான போதாலம் போதரா

அநுபல்லவி.

கானதிலே வள்ளி மின்னை
கல்யாணம் செய்ய வுன்னை
யானழைத் தேனிங் கென்னை
யாசிர்வதித்து பேசக் குதித்து (யானை)

(கணேசர் யானையாக வருகிறார்)

வள்—(பயந்து) ஐயோ ஐயோ வருகிறதே தாத்தா தாத்தா என்னைப் பாதுகாக்க வேண்டும்.

கிழ—ஐயோ என்கிட்ட வாராதே நான் ஓடப்போகிறேன்.

வள்—ஸ்வாமி என்னை இப்போபத்தினின்று காப்பாற்றவேண்டும்.

கிழ—அப்படியானால் நான் சொல்கிறபடி என்னை மணந்துகொள்.

வள்—ஆகட்டும்.

கிழ—(திரும்பி) அண்ணா சற்று விலகவேண்டும் (உரக்க) ஆனையே போ.

வள்—(யானை மறையவும்)

இராகம்-தேசிகம்—தாளம்-ஆதி.

எய்த்துவிட்டேனே கிழவா எய்த்துவிட்டேனே
வாய்த்துடுக்குப் பேசிநின்ற
பேய்த்தனக் கிழப் பிணமே (எய்)

கிழ—வார்த்தை மாறாதே குட்டி வார்த்தை மாறாதே
பார்த்தவர்கள் உன்னைப் பொய்சொல்
தூர்த்தையென ஏசுவார்கள் (வார்)

வள்—ஞானமற்றவனே மரி யாதை கெட்டவனே
கானகத்தின் மீது பொல்லா
ஈனமுற்ற சேதி சொல்ல (ஞான)

கிழ—யானை வந்ததே குட்டி யானை வந்ததே மீண்டும்
போன வழி யை விடுத்து
மானினி யுனை யடுத்து (யானை)

வள்—(பயந்து கிழவனை நெருங்கி) தாத்தா வந்துவிட்டதே ஐயோ தங்கள் சொற்படி கேட்கிறேன் யானையைப் போகச்சொல்லுங்கள்.

கிழ—வாராதே கிட்ட வாராதே உன் குலதெய்வ சாட்சியாய் என்னைக் கல்யாணம் செய்துகொள்கிறேனென்று சொன்னால் யானையை விலக்குகிறேன். இல்லை இல்லை.

வள்—எங்குல தெய்வமாகிய சத்திவேல் கொண்ட சாட்சாத் ஸ்ரீஷண்முகக் கடவுளாணையாக உம்மை மணந்துகொள்கிறேன்.

கிழ—அண்ணா நமஸ்காரம் சென்று வாருங்கள் (திரும்பி) யானையே ஓடிப்போ. (போகவும்) பெண்ணே யானை போய்விட்டது.

வள்—(வருத்தமாய்) ஏ ஷண்முகப்ரபூ! இதுவோ நின் அநுக்ரஹம்

கிழ—ஏ வள்ளி! அஞ்சேல் உன் வேண்டுகோளின்படி சுப்ரமண்யனாகிய நானே மணந்தேன். இதோ பார் என் சுயரூபக்காட்சி (என்று ஷண்முக தரிசனம் காட்டி மாலை சூட்டுகிறார் புஷ்பமாரி பொழிகிறது)

நம்பிராஜன்—(சுப்ரமணியருடன் போரிட்டுத்தோற்றுப்பின் சமாதானமாகி கந்தபிரானுக்கே வள்ளியை அர்ப்பணம் செய்து செல்கிறான்.)

நாரதர்—(வந்து) என் எனது மாதாவாகிய வள்ளிநாயகியார் தலை குனிகிறார்கள் "உன் கையாலானதைப் பார்" என்று சொன்னது ஞாபகம் வந்து விட்டதோ.

வள்—(பணிந்து) ஸ்வாமி! மன்னிக்கவேண்டும்

நார-வ-ம—தாயே! இத்தகைய தரிசனத்தைக் காணவே எதிர்பார்த்திருந்தேன் நமஸ்காரம்.

சுப்-வள்—சுபம். சுபம். சுபம்.

சுபமபூர்ணம்.

0-,2mv1c9,Y
N30

இந்நூலாசிரியராகிய திருவாளர்,

## வித்வானந்த பாஷ்ய V. S. வீரணக்கோனர் என்ற வெ. சி. வீரநாதக்கோவலனர் அவர்களியற்றிய நூல்கள்.

| | |
|---|---|
| சிங்கார நவீனகான ஸ்ரீ வள்ளி திருமணம் இரண்டு பாகமும் சேர்ந்தது | 0—6—0 |
| கோவலன் சரித்திரம் 1, 2 பாகம் தனித்தனி | 0—4—0 |
| அல்லியரசாணி சரித்திரம் | 0—4—0 |
| சுபத்திரா திருமணம் | 0—4—0 |
| சௌ - சௌ - ஐந்து சரித்திரம் | 0—4—0 |
| ஸ்ரீ பாலகிருஷ்ண பஜனமிர்த மெனும் அமிர்தகானம் | 0—5—0 |

## மதுரை M. E. M. பாஸ்கரசாமி அவர்களியற்றிய

| | |
|---|---|
| பாஞ்சாலங் குறிச்சி கட்டபொம்மு துரை சரித்திரக் கதைகள் முதல் பாகம் அணா | 0—6—0 |
| ஷை இரண்டாம் பாகம் | 0—6—0 |

வந்துவிட்டது! வந்துவிட்டது!

## படிக்கப்படிக்க ஓயாசிறிப்பைதரக்கூடிய நூதனபாடல்கள் கிராமபோன் புதிய பிளேட் விகடரத்தினங்கள்

மதுரை பபூன் N. S. ஷண்முகம், A. M. கார்மேக ஆச்சாரி, ஆரியகான M. S. இராமச்சந்திர அய்யர், S. S. மணி அய்யர் M. சாரங்கபாணி நாயுடு, P. S. பிச்சுமணி அய்யர், A. நடராஜ ஆச்சாரி, மனமோகன M; இரங்கசாமி நாயுடு, ராமாராவ், ஆலந்தூர் கம்பெனி மிஸ்டர். ஆத்மலிங்கம் பிள்ளை இன்னும் அநேக விகட சிகாமணிகள் பாடிய

| | |
|---|---|
| கிராமபோன் புதிய பிளேட் பபூன் பாட்டு | 0—2—0 |
| ஷை இரண்டாம் பாகம் | 0—2—0 |
| ஷை மூன்றும் பாகம் | 0—2—0 |

மேல்கண்ட புஸ்தகங்களும், இன்னும் இதர புஸ்தகங்களும் மொத்தமாகவும், சில்லரையாகவும் வியாபாரிகளுக்கு சௌகரியமாயும் கீழ்க்கண்ட விலாசதாரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

S. வீராசாமி நாயுடு,
புக் ஷாப், புதுமண்டபம்,
மதுரை.

பேஜ்மட்டும் ஸ்ரீ கிருஷ்ண பிரஸில் பதிப்பிக்கப்பெற்றது.